V. There are some curious things known about Senor Suner, who dashes about EUROPE so hectically just now. He is General Franco's brother-in-law and leader of the Falangists, but fraternal concord is not greatly in evidence. It is known that the Axis powers would like to see Suner in Franco's place, but the Spaniards, who have had a belly-ful of fighting for three years, are not so anxious to see the change, or to be committed to GERMANY. It is an interesting sidelight on the situation that *Britain and Spain's oil agreement was signed while Suner was fidgetting about the capitals of Europe*!

* * *

VI. "Give you six guesses!" That is the sort of game that one could start every time RUSSIA has a new problem to solve. From the beginning of the war, the betting would have been pretty open, and backers of any particular move at short prices will still be taking risks!

Wishful thinking is no good here. Only one thing seems certain. **Russia's policy is entirely opportunist** and therefore **varies** with each new turn of events. Can you fit together into a consistent whole the following examples of her foreign policy (apparent!)

A now fairly old semi-hostile policy towards GREAT BRITAIN.

The idea of maximum advantage accruing to her by general disorganization and exhaustion in EUROPE.

The Agreement of August 1939 with GERMANY, apparently to encourage her to attack and destroy the Empire, and then profit by the attacker's exhaustion.

Her own 'aggressions' during the war—POLAND, the BALTIC STATES and RUMANIA.

Her acquiescence in German 'aggressions' which obviously **must** be to RUSSIA's detriment.

Her apparent fear that Hitler's vain hammering at ENGLAND may make him switch elsewhere, and her feverish rearming and reinforcing of her borders on the German side.

The confirmation of M. Vinogradoff as Ambassador at ANKARA (a popular appointment in TURKEY) in the place of Von Papen's close associate M. Terentieff, who has not returned after sick (?) leave.

The "Pravda's" repeated references to the might of the British Navy, and sundry other pro-British sentiments.

If you can make sense of these.........well, speculation at a time like this is profitless. Let's merely suggest again that the answer to the puzzle of RUSSIA is "Opportunism"—and even then we may be wrong!

APPENDIX II.

Examples of Misleading Statements in Enemy Broadcasts to India and the Near East for the period September 17th—23rd, 1940.

A.—BROADCASTS IN ENGLISH.

17—9—40.

The Germans claim to have captured a secret British plane-spotting device during the Dunkirk operation, and their radio has been making merry over its alleged ineffectiveness. **Perhaps the fact that the Nazis have found this device "impossible" accounts for the remarkably low rate of losses among British bombers raiding enemy territory—only half-a-dozen were lost in eight days recently, and at no time have the numbers lost been formidable.**

In dilating on the effects of their raids on London and on British shipping, the Germans continue to indulge in really spectacular wishful thinking. "By now" we are told, "Britain has lost much of her shipping, and adequate supplies of food-stuffs and other commodities represent an insoluble problem". **It was on September 10 that the Admiralty announced that Britain now had more merchant shipping in commission than at the beginning of the war; while on September 18, two American correspondents, John McHane of the National Broadcasting System and H. R. Knickerbocker, bore witness to the fact that Covent**

Garden and other markets were full to overflowing, many of the commodities being perishable products which must have been brought into London overnight. The broadcasts to New York of these two correspondents, incidentally, were made shortly after Berlin had announced that "a number of American broadcasting stations which always maintain direct contact with England have for the last 36 hours been unable to get any reports or replies from England".

18—9—40.

The Berlin radio remarks that "the fact that not a single British plane entered Germany on Sunday and Monday nights is regarded by German circles as symptomatic of the R. A. F.'s difficulties".

In point of fact, it was on Sunday that Berlin for the first time experienced two air-raids alarms in one night. Bombs were dropped on the Tempelhof aerodrome, on power-stations, and on military objectives in the north-west of the city. The R. A. F. also carried out raids that night on Hamburg, Wilhelmshaven and other German ports, as well as on rail centres in Germany and the occupied territories. These raids were fully reported in the Air Ministry communiqué issued on Monday.

With regard to Monday night, it was officially stated in London on Tuesday that no R. A. F. bombing raids were made the previous night because weather conditions made accurate bombing of strictly military objectives impossible—an explanation unlikely to appeal to the Germans.

Neutral correspondents in England are a thorn in the side of the Nazis, for their accounts singularly fail to confirm German claims. Particularly upsetting are the expert and vivid American descriptions of the great defence of London, and Berlin now gets "Swedish correspondents in England" to "establish that American correspondents never supply matter of fact reports but always only stories about British successes."

Even the Swedes, however, can recognise what they see. Here is what the London correspondent of the *Dagens Nyheter* wrote on September 20: **"The adaptability of Londoners is simply astonishing...........there is no risk of London giving way in the slightest manner under German attacks".**

19—9—40.

"Observation flights" over London have revealed to the satisfaction of Rome that "the entire metropolis had been destroyed" (though in Bengali Rome cautiously included the words "more or less"). **According to Berlin London was already "utterly destroyed" on Sept 11. Yet between these two annihilations German bombers attacked the place formerly occupied by London and lost 338 aircraft in doing so.**

"Many prisoners of war have been sent to districts in the occupied territory of France because the climate is milder—thus proving German humanity." **The proof would be more convincing if the Germans explained why impoverished France is to provide food for the prisoners.**

21—9—40.

Berlin is unable to make up its mind over the alleged transfer of 27 British businesses to New York. **In the English broadcast we are told that they are insurance companies, in Persian that they "will supply war material to Britain."**

23—9—40.

Telephonic communications between Berlin and Rome must have become a little indistinct. While the Berlin radio exults that not a single British bomb was dropped in Germany last night, its Rome counterpart records that a number of private houses were damaged in Northern Germany.

The Germans claim that their Italian allies continue to advance in Egypt, and that British counter-attacks have been repulsed. **As a matter of fact, the Italians have not moved beyond Sidi Barrani (which they occupied on Sept. 16) and no British counter-attacks have yet been launched.**

B.—BROADCASTS IN ASIATIC LANGUAGES.

17—9—40.

The Rome radio alleges that "the financial position of England has deteriorated a good deal." As if in concert Berlin says that the British War Minister has been obliged to appeal to the Capitalists of Britain to contribute to the War Loan. But they seem to be reluctant to do so."

The British Government's first big borrowing operation was a 3 per cent. War Loan for £300,000,000. It was immediately over-subscribed. Subsequently National War Bonds issued at par bearing interest at 2½ per cent. were put on sale with phenomenal success. Similarly in the case of interest-free loans, during the first two days 949 loans were made, amounting to £1,867,574. In less than a week £3,350,000 was lent and another £1,000,000 promised. By July 23 £12,874,583 had been subscribed. As for National Savings, from the beginning of the campaign to July 20, £124,349,557 had been collected by the sale of Savings Certificates and £126,334,375 by the sale of Defence Bonds. During the same period the balance due to depositors increased by £ 41,115,314. Over £ 20,000,000 were raised in the National Savings Week alone. There are now over 121,520 national savings groups,

18—9—40.

A medicine "to dispel a tired man's fatigue" has been discovered, according to an Italian broadcast, by German chemists. It is to be hoped that an adequate supply is being sent to the French coast where Marshal Goering stalks, awaiting the return of his dwindling air force.

19—9—40.

Unnamed correspondents of unnamed papers belonging to unnamed neutral countries are made to say by the Nazis that "Britain can no longer bear the brunt of German air-raids."

The Turkish paper *Vatan* (not known particularly for any pro-British tendency) says in its issue of yesterday: "When one follows the results of the air attacks on Britain, one reaches the conclusion that a Battle of the Marne has been fought in the air which has turned out unfavourably for Germany. **The conviction that the tide of the war has turned in favour of Britain gains force everywhere in the world**". The *Tan* of the same date (Sept. 18) says, **"Neutral observers attest to the morale of the British people being unshaken by bombing. The answer given by the British nation to the German onslaught is 'We have been expecting this for a year. Bombardments cannot cow us. Here we are and here we stay.'"**

21—9—40.

A "U. S. A. military officer" described as "General George", is made by the Nazis to say that Britain is helpless against German air attacks. The right of this shadowy figure to speak with authority on the subject may be questioned by a rather critical world, but not the right of General Strong, Assistant to the United States Chief of Staff, who has just completed a month's inspection tour of Britain. On September 22, General Strong gave high praise to the Royal Air Force whom he described as "a magnificent body of men". **R. A. F. pilots and machines were, he said, markedly superior to their German counterparts. He added that he believed that Britain would win after a long war. "An invasion attempt now" he said "or in the near future would give the German the surprise of their lives."**

22—9—40.

Two days after telling the world that "ailing children" had been "butchered" in R. A. F. raids over Germany, the Nazis make the remarkable statement that "every German child knows that not a single enemy plane can reach Germany." Crediting Indians with shorter memories even than this would suggest, they announce in another part of the same Hindustani bulletin that "the British R. A. F. dropped bombs...... ...in Germany during the night of Saturday and Sunday. Flying over the river Moselle, the enemy pilots dropped 8 explosive bombs and 40 incendiary bombs and set cornfields and provision stores on fire."

TOUR PROGRAMME

OF THE

Recruiting party, Royal Indian Navy, to recruit Seamen, Stokers, Signalmen and Wireless Telegraphists.

Place.	Date.		Arrive.		Leave.	Remarks.
Mangalore ...	4th	November	Monday P. M.		...	Night at Mangalore.
,,	5th	,,	Tuesday		...	Recruit Mangalore.
,,	6th	,,	Wednesday		09.35	In Train.
Cannanore ...	6th	,,	,,	12.35	...	Recruit Cannanore.
,,	7th	,,	Thursday		12.55	Recruit Cannanore and leave.
Calicut ...	7th	,,	,,	15.00	...	Night at Calicut.
,,	8th	,,	Friday		15.00	Recruit and leave.
Ernakulam ...	9th	,,	Saturday	10.00	...	Recruit Ernakulam.
,,	10th	,,	Sunday		...	At Ernakulam.
,,	11th	,,	Monday		10.00	Leave for Quilon.
Quilon ...	11th	,,	,,	15.00	...	Night at Quilon.
,,	12th	,,	Tuesday	...	...	Recruit Quilon.
,,	13th	,,	Wednesday		10.00	In Train.
Madras ...	14th	,,	Thursday	07.00	...	At Madras.
,,	15th	,,	Friday	...	...	Recruit Madras.
,,	16th	,,	Saturday		08.00	In Train.
Delhi ...	18th	,,	Monday	09.00	...	At Delhi.
,,	19th	,,	Tuesday	...	08.00	Leave for Jhajjar.

PROGRAMME OF LECTURES

OF THE

Pudukkottai War Information Bureau.

1940.—

LECTURE XIV.

October ...	12, Saturday ...	Town Hall ...	6.30 p. m.
	13, Sunday ...	Muslim Association Pudukkottai.	5.00 p. m.
		Mithulaipatti ...	5.30 p. m.
		Karaiyur ...	5.30 p. m.
	14, Monday ...	College (A) Englisn ..	10.25 a. m.
		Rani's School ...	10.25 a. m.
		Karambakkudi ...	5.30 p. m.
		Vehupatti ...	5.30 p. m.
	15, Tuesday ...	College (B) Tamil ...	10.25 a. m.
		Viralimalai ...	5.30 p. m.
		Nachandupatti ...	5.30 p. m.
		Panayapatti ...	5.30 p m.
		Pudukkottai Town Sandarkoil Amman Sannidhi.	6.30 p. m.
	16, Wednesday	Ladies Club (at Rani's School).	5.00 p. m.
		Kuruvikondanpatti ...	5.30 p. m.
	17, Thursday ...	Puduppatti (Ponnamaravathi).	5.30 p. m.
		Alangudi ...	5.30 p. m.
	18, Friday ...	C. S. M. School ...	10.00 a. m.

1940—

LECTURE XV.

October ...	19, Saturday ...	Town Hall ...	6.30 p. m.
	20, Sunday ...	Tirugokarnam ...	5.30 p. m.
		Adanakkottai ...	5.30 p. m.
		Poovarasakudi ...	5.30 p. m.
	21, Monday ...	College (A) English ...	10.25 a. m.
		Rani's School ...	10.25 a. m.
		Arimalam ...	5.30 p. m.
	22, Tuesday ...	College (B) Tamil ...	10.25 a. m.
		Chery ...	5.30 p. m.
		Kunnandarkoil ...	5.30 p. m.
		Kudimiamalai ...	5.30 p. m.
		Ramachandrapuram ...	5.30 p. m.
	23, Wednesday	Annavasal ...	5.30 p. m.
		Virachilai ...	5.30 p. m.
	24, Thursday ...	Konapet ...	5.30 p. m.
		Perungalur ...	5.30 p. m.
	25, Fridry ...	C. S. M. School ...	10.00 a. m.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,800—12-10-40.

புதுக்கோட்டை ஸமஸ்தான

யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1940-ம் ஞு அக்டோபர் மீ 12உ [ந. 14.

பிரஸங்கம் XIV.

(A)

தஸராவும், யுத்தமும்.

(இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆப் இந்தியாவிலிருந்து பத்திராதிபரின் அனுமதியின் பேரில் மொழி பெயர்க்கப்பட்டது.)

தேச (இந்தியா) மெங்கும், இந்த வாரத்தில் தஸரா கொண்டாடப்படும். இது யுத்தத்தில் ஜயம் பெருவதற்காகச் செய்யும் பூஜை. கத்தி, துப்பாக்கி, ஈட்டி, கோடரி, ஏதாவது ஒரு ஆயுதத்தை வைத்து ஒவ்வொரு கிரகத்திலும் பூஜை செய்யப்படும்.

வழக்கம்.

இந்தப் பூஜை செய்யும் தினம், நவராத்திரி என்ற ஒன்பது நாட்களில் விசேஷ தினமாகும். தோட்டி முதல் தொண்டமான் வரை எவர்களும் பூஜை செய்வார்கள். பெரியோர்கள் வைத்துவிட்டுப்போன கத்தி, கேடயங்களை, அறைகளிலிருந்து எடுத்து, தேய்த்து, துடைத்து, புதுப்பித்து, பூஜையில் வைப்பார்கள். (யந்திரங்களைக்கொண்டு செய்யும் யுத்தம் முற்காலங்களில் இந்தியாவில் கிடையாது). இந்த ஆயுதங்களுக்குக் குங்குமம் சாத்தி, எலுமிச்சை முதலிய பலாதிகளையும், பக்குவம் செய்த தான்ய பலகாரங்களையும் (இவைகள், முற்காலத்தில் சைன்யங்களுக்கிட்ட உணவாயிருக்கலாம்) நிவேதனம் செய்வார்கள். மேலும், இன்று தர்மத்தை நிலை நாட்டவும், உலக க்ஷேமத்திற்கும், முற்காலத்தில் செய்த மகா யுத்தங்களை விவரிக்கும் புராணங்களைப் பாராயணம் செய்வார்கள்.

புராணங்கள்.

புராணங்கள் எழுதப்பட்டதற்கு முன்னேயே இந்தப் பூஜை நடந்து வந்ததாகத் தெரிகிறது. நவராத்திரியில் துர்க்காலக்ஷ்மி, மஹிஷாஸுரனைக் கொன்றதாக ஐதீகம். ஸ்ரீ ராமபிரான் துர்க்காதேவியைப் பூஜித்த பிறகுதான் ராவணனோடு யுத்தத்தைத் துவக்கினர். பாண்டவர்கள் தங்கள் ஆயுதத்தை வன்னி மரத்தில் ஒரு சமயம் ஒளித்து வைத்ததால், வன்னி மரமும் அன்று ஆராதிக்கப் படுகிறது. மதுவென்ற அசுரனைக் கொல்ல, மஹாவிஷ்ணுவும், விருத்திராஸுரனைக் கொல்ல இந்திரனும் தேவியை ஆராதனை செய்தார்கள்.

புராண காலத்துக்குப்பின், விஜய தசமியானது வெற்றிக்கெடுத்த நாளாகக் கருதப்பட்டு, அரசர்கள் அன்று, பூஜைகளைச் செய்துகொண்டு படையெடுக்கும் வழக்கம் ஏற்பட்டது. பூஜை மகிமையால், சக்தி வளர்ந்து, பல அரிய வீரச் செயல்கள் செய்யப்பட்டன.

தஸரா காலத்தில் துர்க்காலக்ஷ்மியை கன்னி ரூபமாய் ஆராதிக்கப்படும். ஸாம்பவி, துர்க்கை, காளி, பவானி, பகவதியென்று அவர்களுக்குப் பல நாமங்கள் உண்டு. சிவாஜி பவானியை ஆராதித்தார். நாயர்கள் பகவதியை ஆராதிக்கிறார்கள். எல்லாம் பார்வதியின் ரௌத்ராகார அம்சங்களாகும்.

நவராத்திரி காலத்தில் அம்பிகை, முகமலர்ந்து, சாந்தமூர்த்தியாகத் தோன்ற மாட்டாள். அசுரரைவென்று, மண்டை ஓடுகளை மாலையாய்த் தரித்து, பயங்கர ஸ்வரூபத்தோடு, ஸம்ஹாரமூர்த்தியாய் விளங்குவாள்.

தர்ம ஸ்தாபனம்.

அஹிம்ஸா தர்மமானது எக்காலத்துக்கும் எடுத்த தர்மமல்ல. தேவர்களுக்கும், மனிதர்களுக்கும், ஆபத்து நேரிடும் காலங்களில் ஆயுதப்பிரயோகமே தர்மமாகும். அசுரர்களை வதைப்பது அநியாயமாகாது. புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும் யுத்தங்கள், தேசங்களை அபகரிப்பதற்காகச் செய்த சண்டைகளல்ல. தர்மத்தை ஸ்தாபிக்கும்பொருட்டுச் செய்த யுத்தங்கள்.

உலகத்தில் அதர்மம் மேலிட்ட பிரளய காலங்களில் தேவர்களும், புண்ணிய புருஷர்களும் அவதரித்து, சைன்யங்களை அபாரமாய்த் திரட்டிக்கொண்டு, போர் செய்தார்கள். அம்மாதிரி பிரளய காலம் இப்பொழுது மறுபடியும் வந்திருக்கிறது. இந்த மகாயுத்தம், ஒரு தேசம், அல்லது, ஒரு பூபாகத்தை மட்டும் பாதிக்கக்கூடியதில்லை. உலக க்ஷேமத்தையே நிலை நாட்டக்கூடியது.

இப்பொழுது நடக்கும் மகாயுத்தம்.

இந்த மகாயுத்தம், மனுஷ்யஸ்வதந்திரத்தையும், உயிரையும் பாதுகாக்க ஏற்பட்டிருக்கிறது. பழைய காலத்து அசுரர்களைப்போல், இப்பொழுது, சில அசுரர்கள் தோன்றி, நம்மை பொம்மைகள்போல் ஆட்டி வைக்கப்பார்க்கிறார்கள். ஹிட்லர் ஏற்கனவே ஒன்பது தேசங்களைப் பிடித்தாய் விட்டது. அக்கிரமத்தில் இவர், கம்ஸனையும், (தெய்வத்தை மறந்து தன்னையே பூஜை செய்ய

பிரஹ்லாதரைச் சொன்ன) இரண்யனையும், ஒப்பார். இந்த அசுரனை ஸம்ஹாரம் செய்யவேண்டியது நமது கடமையாகும்.

அமெரிக்காவில் இருப்பவர்கள், விவேகிகள்; விஷயங்களை நன்ருய்த் தெரிந்து கொண்டவர்கள். இவர்களே, ஜெர்மனியைத் தோற்கடிப்பது உலக க்ஷேமத்துக்கு அவச்யமென்று, தங்களையும் பாதுகாத்துக்கொண்டு, ஏற்கனவே எதிர்த்து நிற்கும் பிரிடனுக்கு வேண்டிய உதவியையும் செய்து வருகிருர்கள். ஆகவே, இது பிரிடனுடைய சுயலாபத்துக்கென்று செய்யும் யுத்தமல்ல. முற்காலத்தில் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும், அதாவது தர்மத்துக்கும், அதர்மத்துக்கும் நடந்த யுத்தத்தையொக்கும்.

அசுரர்களை வென்று, தேவர்களடைந்த ஜயத்தை தஸரா காலத்தில் நாம் கொண்டாடுகிறோம். இந்த சமயத்தில் இப்பொழுது நடக்கும் யுத்தமும் அதே மாதிரி யுத்தமென்பதையும், அது உலகத்தின் க்ஷேமத்துக்கென்பதையும் மறக்கக் கூடாது.

'மனிதர்கள் ஸ்வதந்திரத்தோடு வாழ்வதா, அல்லது கொடுங்கோலுக்கு இரையாவதா' என்று நிர்ணயிக்கவேண்டிய சமயம் இதுதான். 'ஸ்வஸ்திகா'வை ஹிட்லர் தனக்கு அடையாளமாக வைத்துக்கொண்டிருக்கிருர். 'ஸ்வஸ்திகா' என்ற பதத்துக்கு 'ஸர்வ-ஜன-மங்களம்' என்று பொருள். இவர் ஸர்வ ஜனங் களுக்கும் ஹிம்ஸையைச் செய்துவருகிருர்.

இந்த மகாயுத்தத்தில் ஹிட்லர் ஒரு கக்ஷி, மற்ருெரு கக்ஷியில் இவரை உலகமே எதிர்த்து நிற்கிறது. இந்த யுத்தம், இந்தியா, அல்லது பிரிடன் அல்லது பிரிடிஷ் சாம்ராஜ்யத்துக்காக மட்டுமில்லை. இதனுல் உலகமே க்ஷேமத்தை அடையப்போகிறது.

நவராத்திரியானது, உலகத்தில் தோன்றும் அசுரர்களை ஆயுதப் பிரயோகத் தால் வென்று தர்மத்தை நிலைநாட்டும் காலமாகும். ஸ்ரீ கிருஷ்ணபகவான் அசுரர் களை பின்வருமாறு, பகவத்-கீதையில் வர்ணித்திருக்கிருர் :—

"அசுரர்களுக்கு தர்மத்தில் பிரவர்த்தியும் ஏற்படாது; அதர்மத்தில் நிவர்த்தியும் ஏற்படாது. இவர்களுக்கு சித்த-சுத்தம், நன்னடக்கை, சத்தியம் கிடையாது."

"இவர்கள் உலகம் பொய்யென்பார்கள்; கடவுள் இல்லையென்பார்கள்."

"இவர்கள், பேராசை, இறுமாப்பு, அகம்பாவம், பாசாங்கு சொண்டவர்கள்: அஞ்ஞானத்தால் புத்தி மயங்கி அக்கிரமங்களைச் செய்வார்கள்"

"இவர்கள், 'இன்றைக்கு இந்த ஆசை நிறைவேறிற்று, நாளைக்கு மற்ருெரு ஆசை நிறைவேற வேண்டும்; இன்றைக்கு ஒரு லாபம் கிடைத்தது, நாளைக்கு மற்ருெரு லாபம் வேண்டும்; இன்று ஒரு சத்துருவை வென்ருய்விட்டது, நாளைக்கு மற்ருெரு சத்துரு பாக்கி. நானே பூபதி; எனக்கே இவ்வுலகம்; எனக்கே ஸர்வ மங்களமும், சுகமும்' என்று சொல்லிக்கொண்டிருப்பார்கள்"

புராணங்கள் சொல்லுகிறபடி, இதுதான் அசுரர்களின் ஸ்வபாவம். இக்காலத்து சர்வாதிகாரிகளின் ஸ்வபாவமும் இதுதான். அசுர ஸம்ஹாரத்தை வேண்டியே நவராத்திரிப் பண்டிகையைக் கொண்டாடுகிறோம். சாதாரண காலங்களில் தேவி சாந்தமூர்த்தியாய்த் தோன்றுவாள். நவராத்திரியிலோ ரௌத்ராகாரத்தை அடைவாள். இந்த வருஷம், தேச முழுவதும், ஒரு மனப்பட்டு பிரார்த்தித்தால் தேவி மகா சக்தியாய்ப் பிரஸன்னமாவாள். அப்பொழுது லக்ஷம் ஹிட்லர்களானாலும் அவள் முன் நிற்கமுடியாது; எருமைத் தலை மஹிஷாஸுரனை வதைத்ததுபோல் ஹிட்லரை ஸம்ஹாரம் செய்துவிடுவாள். அசுரப் படைகள் அழிந்ததுபோல் ஹிட்லர் சைன்யங்களும் அழிந்துவிடும்.

ஆகையால், இந்த வருஷத்தில் செய்யும் தஸரா பூஜைக்கு விசேஷ மகிமையுண்டு; உலக சரித்திரத்தில், இது, உலகத்துக்கே புது உயிரைக் கொடுக்கச் செய்த விசேஷ பூஜையென்று சொல்லப்படும்.

(B).

பிரிடனுக்கு வெற்றி நிச்சயம்.

சென்ற வருஷம்தான் ஜெர்மனி போலண்டைப் படையெடுத்தது. இதற்குள்ளாக ஜெர்மனிக்கு வெற்றிக்குப்பின் வெற்றியும், வெற்றிக்குமேல் வெற்றியும் கிடைத்திருக்கின்றன. இவைகளுக்கும் மேலாகக் கடைசியாக, உலகத்திலேயே மிக மகத்தான சைன்யமென்று 20 வருஷகாலங்களாகக் கருதப்பட்ட பிரெஞ்சு சைன்யமும் ஆறே வாரங்களில் முறியடிக்கப்பட்டது. நாடக விநோதத்தைப் போலக் கண்ணைப் பறிக்கக்கூடிய இந்த விந்தை எல்லாம் பகட்டாய் நடந்தன.

இவைகளைக் கண்ணுற்ற உலகத்தார் ஜெர்மன் சைன்யங்களை ஒருவராலும் தோற்கடிக்க முடியாதென்று நினைப்பது ஸகஜம்தான். ஆனால் இந்தச் சைன்யங்கள் இங்கிலீஷ் சானல் என்ற கடற்கரைக்கு வந்த உடனே திடீரென்று தடுமாறி, நின்று விட்டன. ஆழ்ந்து பார்க்காதவர்களுக்கு இதுவும் ஆச்சரியத்தைக்கொடுக்கக்கூடியதுதான்.

ஆனால் இந்த வெற்றிகளைக் கண்டு மயங்காது நிதானித்துக் கவனிப்பவர்களுக்கு ஆச்சரியம் ஒன்றும் ஏற்படாது. இதனுடைய அடிப்படையான உள் காரணங்களும் வெளிப்படும். யுத்தசம்பவங்களும், எதிர்பார்க்கவேண்டியபடியேதான் நடந்து வருவதும், இதில் விந்தை ஒன்றுமில்லாததும் புலப்படும். ஏனெனில், யோசித்துப்பார்க்கும்போது ஹிட்லருடைய மின்னல் படையெடுப்புத்தந்திரங்களெல்லாம் நிலச்சண்டைக்குத்தான் ஏற்றவைகள். ஆகையால் கடற்கரைக்கு வந்தவுடன் இந்தத் தந்திரங்களெல்லாம் பயனற்றுப் போயின. கடற்கரைக்கு வந்தவுடன் தன்னைவிட மிக வெகுபலமான பிரிடிஷ் கடற்படையை எதிர்க்கும் அவசியம் ஹிட்லருக்கு வந்து விட்டது. ஹிட்லர் கடற்கரையைச் சேர்ந்ததிலிருந்து யுத்தத்தின் போக்கே மாறிவிட்டது. நிலச்சண்டையில் வெற்றிபெற மின்னல் போன்ற வேகம் வேண்டும்; கடலில் வெற்றிபெற தாமதித்து முற்றுகை

போடக் கப்பல் பலம் வேண்டும். இதுதான் கடற்சண்டையின் போக்கே வேறுபட்டிருப்பதற்குக் காரணம்.

நிலச்சண்டையில் வெற்றியடைந்த நெபோலியன் கடலால் தடுக்கப்பட்டான். அதே போல் 1914-ல நடந்தயுத்தமும் இப்பொழுது நடக்கும் யுத்தமும் அந்தப் யோக்கை ஒத்திருக்கிறது. ஜயத்தை நாடி ஜெர்மானியர்கள் பல வருஷங்களாக வேண்டிய யுத்த முஸ்தீப்புக்களெல்லாம் தயாரித்து வைத்துக்கொண்டார்கள்; பிரசாரங்கள் பலமாய் நடத்திஞர்கள்; இரக்கமில்லாத யுத்த முறைகளைக் கைக்கொண்டார்கள்; தரைமார்க்கமாய் வேகமாய்ச்செல்ல ரயில் பாதைகள் போடப்பட்டன, எதிர்பார்க்காதசமயத்தில், மனோவேகமாய்த்திடீரென்று சென்று எதிரிகளை நசித்து விட்டார்கள். இதுவே தற்காலத்திய தரைச்சண்டையின் போக்காகும்.

இம்மாதிரியான சண்டையில் எதிர்க்கமுடியாதபடி, ஆரம்பத்தில் நேயக் கக்ஷிக்குச் சில இடையூறுகள் இருந்தன. முதலாவதாக இம்மாதிரி அதர்ம யுத்தத்தைச்செய்ய அவர்கள் மனது இடங்கொடுக்கவில்லை. தளவாடங்களும் சேர்க்கப்படவில்லை. அவர்கள் தேசத்திலுள்ள கக்ஷிகள் ஒன்று சேருவதற்குமுன் சண்டை துவங்கி விட்டது. கையிலிருந்த சைன்யங்களும் எல்லைப்புறங்களில் பலவாருகச் சிதறிக்கிடந்தன.

இந்த இடையூறுகளெல்லாம் சீக்கிரம் விலகிவிட்டன. அதிலும், விசேஷமாக பிரிடிஷ் ஸாம்ராஜ்யத் தலைமை கொண்ட பிரிடனில் அளவில்லாத பலம் உபயோகப்படுத்த ஏற்கனவே தயாராயுமிருந்தது.

பிரிடனுடைய பலமானது இருவகைப்படும்: கடல் பலம், தர்மத்தாலும் நியாயத்தாலும் ஏற்படும் பலம். கடல் பலம் இருப்பதால், உலகத்திலுள்ள எல்லா தேசங்களிலிருந்தும் தனக்கும் தன் நேயர்களுக்கும் வேண்டிய சாமான்களைத் தடையில்லாது வரவழைத்துக்கொள்ளும் அனுகூலத்தை பிரிடன் பெற்றிருக்கிறது. அதோடு, ஜெர்மனியைக் கடல் முற்றுகை போட்டு ஐரோப்பிய கண்டத்திலேயே வரவர பஞ்சமதிகரிக்கவும் செய்துவிட்டது. உலக நாகரீகத்தை நிலைநிறுத்தப்போர்செய்வதால் பிரிடனுடைய யுத்தம் தர்ம யுத்தமாயிற்று. ஜெர்மானியர் தாங்களே உயர் பிறப்பென்று எண்ணி ஐரோப்பா முழுவதையும் கையாளப்பார்க்கிருர்கள். இவர்கள் கொடுங்கோலைத் தொலைப்பது பிரிடனும், மற்ற ஐரோப்பிய நாடுகளும் சேர்ந்து முயற்சி செய்யவேண்டிய காரியமாய் விட்டது. இவ்விதமாக தர்ம தேவதையின் பலம் பிரிடனுக்குண்டு. ஆகவே பிரிடனுக்கு கடல் பலமும் தர்ம-பலமும் சேர்ந்தன. இவைகளைக்கொண்டு பிரிடன் எதிரியைத்தடுப்பதோடு நில்லாமல் அவனைத்திருப்பி அடித்து முடிவில் ஜயிக்கவும் முடியும். ஆனல் சற்று தாமதித்துத்தான் நடக்கும். ஏனெனில் கடல்-பலம், தர்ம-பலம், பொருள்-பலமெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய்த்தான் பலனைக் கொடுக்கும். ஆகையால் இவைகளால் வெற்றிபெறச்சற்றுப் பொறுத்தாக வேண்டும்.

இவையெல்லாம் ஹிட்லருக்குத் தெரியாத காரியங்களல்ல. இவைகளின் மகத்தான பலத்தை ஹிட்லர் நன்கறிவார். இவைகள் பிரிடனுக்குப் பலனைக் கொடுப்பதற்குள்ளாகவே மின்னல் வேகத்தோடு போர்செய்து முழு வெற்றியையும் தான் அடைந்துவிடப்பார்த்தார். ஆனால் இவர் செய்த யோசனைகளில் இரண்டு பிழைகள் ஏற்பட்டு இவர் ஆசை அழிந்தது. முதலாவது, ஜெர்மனிக்கு பலம் நிலப்படை; பிரிடனுக்கு பலம் கடற்படை; ஜெர்மன் நிலப்படையைக் காட்டிலும் பிரிடன் கடற்படைக்கு பலமதிகம். இதைச் சரிப்படுத்த ஜெர்மனி பிரிடனைக்காட்டிலும் அதிகமாக விமானங்களைக் கட்டிக்கொண்டது. இவர்செய்த பிசகுகளில் இது முதலாவதாகும். ஏனென்றால்:—

பிரான்ஸில் முன் நடந்த சண்டையிலும் ஸரி, பிரிடனில் இப்பொழுது நடந்து வரும் யுத்தத்திலும் ஸரி, ஜெர்மனிக்கு விமான மிகுதியால் பலன் ஒன்றுமில்லை. ஏனென்றால் ஜெர்மன் விமானங்களைவிட பிரிடிஷ் விமானங்கள் நன்றாய்க் கட்டப்பட்டிருக்கின்றன; பிரிடிஷ் விமானிகளும் ஜெர்மன் விமானிகளைவிட சாமர்த்தியமாய் சண்டை செய்கிறார்கள். மேலும் ஜெர்மன் விமானங்களுக்கு பிரிடிஷ் யுத்தக்கப்பல்களை வெல்ல முடியவில்லை.

இரண்டாவதாக, பிரான்ஸ் தோற்றுப்போனவுடன் பிரிடன் பயந்து அங்குள்ள சமாதானக்கக்ஷிக்காரர்கள் தலைமை வகித்துத் தான் சொன்னபடி சமாதானம் செய்து விடுவார்கள் என்று எதிர்பார்த்தார். அதுவும் நடக்கவில்லை. பிரிடன் வெகு கஷ்டப்பட்ட சமயத்திலும் சமாதானத்தை நாடவேயில்லை. விசாரம் அதிகப்படப்பட அவர்கள் மனோ தைர்யமும் அதிகப்பட்டது.

இம்மாதிரி ஒரு வருஷம் கழிந்ததிலிருந்து இப்பொழுது ஜெர்மன் பலம் குன்றிப்போய், பிரிடனுடைய பலம் அதிகரித்து விட்டது. காலதாமதம் ஏற்பட்டால் பிரிடனுடைய பலம் அதிகப்பட்டு விடுமென்று பயந்துதான் ஹிட்லர் அவஸர அவஸரமாய்ச் சண்டை செய்தார். தாமதத்திலிருந்து பிரிடன் கைவலுத்து விட்டது. ஹிட்லர் ராணுவம் இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் இனி அதிகப்படுத்த முடியாது. பிரிடிஷ் முற்றுகையினாலும், பிரிடிஷ் விமானங்கள் இரவு தவறாது எதிர்ப்பதாலும், ஜெர்மன் ராணுவபலம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகிறது.

ஹிட்லர் ஜயித்த தேசத்தார்கள் முதலில் திகைத்து, பயந்து சும்மாயிருந்தார்கள். இப்பொழுது பயம் தெளிந்து கலகம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ஜெர்மனிக்குள் வசிப்பவர்கள் வெற்றிகளிலிருந்து ஏதோ பெருத்தலாபம் வரப்போவதாக ஒரு சமயம் நினைத்ததுண்டு: இப்பொழுது இவைகளெல்லாம் வறட்டு வெற்றிகளென்றும், பலனற்றவையென்றும் தெரிந்துகொண்டார்கள். மாரி காலத்தில் வரப்போகும் பஞ்சத்துக்குப்பயந்து சமாதானம் செய்துகொள்ள விரும்புகிறார்கள். ஜெர்மனி தன்தேசத்துக்குள் போட்ட ரயில் பாதைகள் நில யுத்தத்துக்கு முதலில் சாதகமாயிருந்தன. இப்பொழுது ராஜ்யம் விஸ்தாரப்பட்டு விட்டதிலிருந்து இந்தச் சாதகம் பாதகமாய் முடிந்திருக்கிறது.

இதற்கு எதிராக, இப்பொழுதுதான் பிரிடனுக்கும் நேயக்கக்ஷியர்களுக்கும் ரோஸம் வலுத்திருக்கிறது. வேண்டிய சைன்யங்களையும், யுத்த சாமான்களையும் ஜாக்கிரதையாய்ச் சேகரித்து விட்டார்கள். பிரிடிஷ் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யக்கூடியவைகளை எல்லாம் பூராவாக, செய்யத்தொடங்கி விட்டன. பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளெல்லாம் தாய் நாட்டோடு அந்யோன்யமாய் உழைக்கின்றன. சாம்ராஜ்யத்திலிருந்து தாய்நாட்டுக்கு கடல்வழிவரும் பொருள்களைத்தடுக்க ஜெர்மன் விமானங்களுக்கு முடியவில்லை. ஜெர்மனியில் புதிதாய் கட்டும் விமானங்களைக்காட்டிலும் அதிகமாய் இப்பொழுது பிரிடனில் விமானங்கள் கட்டப்படுகின்றன. ஆகையால் இப்பொழுது எண்ணிக்கைப்படிக்கும் பிரிடிஷ் விமானப்படை ஜெர்மன் விமானப்படைக்கு மேலாய்விட்டது.

ஜெர்மனி பிரிடனை 'முற்றுகை' போட்டு விட்டதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறது. முற்றுகையொன்றுமில்லை. சிறு உபத்திரவம்தான். இந்த உபத்திரவம் கூட இல்லாது, அட்லாண்டிக்கின் அக்கரையில் அமெரிக்கர்கள் தாராளமாய் தளவாடங்கள் செய்து பிரிடனுக்கு உதவி செய்கிறார்கள். இந்த உதவி நாளுக்கு நாள் அதிகரிக்கிறது. தன் சொந்தத் தற்காப்புக்கு வைத்திருக்கும் யுத்த உபகரணங்களைக்கூட அமெரிக்கா பிரிடனுக்குக் கொடுத்து உதவுகிறது. பிரிடன் தோற்றுப்போகும் போலிருந்தால் அமெரிக்கா தன் தற்காப்புத் தளவாடங்களைக் கொடுத்துவிடாது. இதுவே பிரிடனுடைய கைவலுத்து விட்டதற்கும் வெற்றி வரப்போவதற்கும் அடையாளமாகும்.

கடைசியாக, முக்கியமாய் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது. சர்ச்சில் தலைமைவகித்ததிலிருந்து பிரிடனுடைய மனோபாவமும், நோக்கங்களும் தலைகீழாய், அடியோடு, மாறிவிட்டன. இப்பொழுது நடக்கும் யுத்தம் யுத்தமல்ல; ஒரு பிரளயமென்றே சொல்லலாம். இப்பொழுது நடக்கும் யுத்தத்தைப்பற்றி யோசிப்பதோடு தீர்க்கதரிசனத்தோடு எதிர்கால, சாச்வத, நீடித்த, தேச க்ஷேமத்தைப்பற்றியும் பிரிடன் ஆலோசனைகளைச் செய்து வருகிறது. இதிலிருந்து பிரிடனே புதிதாக மாறப்போகிறது; ஜன நாயக முறைகளெல்லாம் ஜனங்களுடைய க்ஷேமத்துக்கு அன்வயிக்கப்படப்போகின்றன. இந்த விஷயத்தில், மற்றதேசங்களைவிட, வெகு அதிகமாய் பிரிடன் முன்னேறப் போகிறது.

ஆகையால் காலதாமதமெல்லாம் நம்முடைய க்ஷேமத்துக்குத்தான். ஆனால், அதை நமக்கு உதவும்படி செய்து கொள்ள விவேகம் வேண்டும. இப்பொழுது பிரிடன் இந்த விவேகத்தோடு நடந்து கொள்ளுகிறது. தன் பலத்தையெல்லாம் தற்காப்புக்கும், பிறகு வெற்றிக்கும், கடைசியில் ஐரோப்பாவிலேயே நிரந்தரமாய்ச் சமாதான முண்டாவதற்கும் உபயோகப்படுத்துகிறது. ஆகையால் யுத்தத்தால் ஐரோப்பாவில் ஹிட்லர் இந்த ஒரு வருஷத்தில் ஏற்படுத்தியிருக்கும் மாறுதல்களைக் காட்டிலும் பிரிடன் செய்யப்போகிற மாறுதல்கள் மேலானவையாய் உலகத்துக்கே க்ஷேமத்தை உண்டாக்கப்போகின்றன. இதைப்பற்றிச் சரித்திரம் இனி பிரிடனைப் புகழ்ந்து பேசும் என்பதிலும் சந்தேகமில்லை.

வார யுத்தச் செய்திகள்.

(2—10—40 லிருந்து 9—10—40 வரை).

பிரேன்னன் கணவாயில் ஆலோசனை.—மூவரசு-உடன்படிக்கை முடிந்த உடனே ஆலோசனை செய்ய ஹிட்லரும், முஸோலினியும் 5-ம் தேதி வெள்ளிக் கிழமையன்று பிரென்னன் கணவாயில் சந்தித்தார்கள். சந்திப்பு வெகு பகட்டாய் நடந்தது. நடுநிசியில் ரயில் வண்டிகள் புறப்பட்டன. கணவாயில் ரயில் ஸ்டேஷனெல்லாம் அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது; தலைவர்கள் வண்டிகளிலிருந்து இறங்கினவுடன், கைகுலுக்கி, கைநீட்டி, ஆலிங்கனம் செய்துகொண்டார்கள். ஆகாயத்தில் யுத்த விமானங்கள் பறந்து இவர்களைக் காத்து நின்றன. இவர்கள் ஸாவகாசமாயும், உல்லாசமாயும் போஜனம் சாப்பிட்டுக் கொண்டு மூவுலகத்தை (ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா) வென்றுவிட யோசனைகள் நடந்தன.

வைத்தியர்கள் அவசரமாய்க்கூடி இரகசியமாய்ப் பேசினால், நோயாளியின் நிலைமை கெட்டுவிட்டதென்று யூகிப்பதுபோல இவர்களுடைய அவசர ரகஸியப் பேச்சு சந்தேகத்துக்கிடம் கொடுக்கிறது. வெளிப்பார்வைக்கு ஸரஸமாய் இருந்தாலும், முன்னொருகாலத்தில் காஷியஸும், புருடஸும் மனஸ்தாபப்பட்டுக் கொண்டமாதிரி, இவர்களும் ஒருவருக்கொருவர் குற்றம்சாட்டிக்கொள்ள, சந்தித்திருக்கலாம். ஜெர்மன் விமானப்படை பிரிடன் சண்டையில் தோற்றுப்போனதைப்பற்றியும், பிரிடனைப் படையெடுக்க சேர்த்துவைத்த ஜெர்மன் கப்பல்கள் எல்லாம் மூழ்கிப்போனதைப்பற்றியும், முஸோலினி இகழ்ந்து பேசியிருக்கலாம். ஹிட்லர், திருப்பி இதாலியின் கப்பல்படை ஒளிந்து ஓட்டம்பிடிப்பதைப்பற்றியும், நைல்—தீரத்தையும், ஸூயஸையும் பிடிக்கப்போன கிரேஸ்யானி நூற்றுக்கணக்கான மைல் தூரத்திலேயே நின்றுவிட்டதைப்பற்றியும் சுட்டிக்காட்டி ஹிட்லர் ஏசியிருக்கலாம்.

இவர்கள்செய்த ரகஸிய ஆலோசனையைப்பற்றி வதந்திகள் பலவிதமாக வந்துகொண்டிருக்கின்றன. மறுபடியும் சமாதானப்பேச்சு விடுகிறார்களா? பிரான்ஸோடு உடன்படிக்கை செய்துகொண்டு, பிரிடனை எதிர்க்க பிரான்ஸைத் தூண்டுகிறார்களா? ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும் புது அரசியல் அமைக்க யோசனையா? எகிப்தின் படையெடுப்பை நிறுத்திவைப்பதா அல்லது ஜெர்மன் சைன்யத்தையும் சேர்த்துக்கொண்டு அங்கு யுத்தத்தை நடத்துவதா? பால்கன்ஸ் ஸிரியாவுக்குள் நுழைந்து இராக்—எண்ணெய் நிலங்களைப் பிடிக்கலாமா அல்லது ஸ்பெயினுக்குள் நுழைந்து ஜிப்ரால்டரைப் பிடிக்கலாமா? ரஷியாவைச் சமாதானப்படுத்துகிறதா? அல்லது தங்களுக்குள் நேசம் குறையவில்லையென்றும், தங்களுக்கு அபஜெயம் வரவில்லையென்றும், உலகத்தை நம்பச்செய்ய நடிக்கும் நாடகமா? ஒன்றும் தெரியவில்லை. ஆனால், இவர்களுக்கு ஏதோ ஆபத்து நேரிட்டு, அதைப்பற்றி ஆலோசனை செய்யக்கூடியதாக நிச்சயிக்கலாம்.

விமான எதிர்ப்புகள்.—இந்த எதிர்ப்புகள் பிரிடன் மேல் வரவரக் குறைந்தும், ஜெர்மனிமேல் வரவர அதிகப்பட்டும் வருகின்றன. இந்த வாரத்திய எதிர்ப்பு விவரங்கள் இந்த அறிக்கையின் முடிவில் பார்க்கலாம். பொதுவாய்ச் சொல்லு மிடத்து ஹிட்லர் மூன்றும் தடவை செய்த விமான எதிர்ப்பும் வீணாய்விட்டது. லண்டன் தற்காப்பு நிலயங்கள் ஒன்றும் சேதப்படவில்லை. நகரத்தார்களுடைய தைர்யமும் குறையவில்லை. இனி பிரிடனைப் படையெடுக்கும் எண்ணத்தையும் ஹிட்லர் விட்டுவிடலாம். சென்ற வாரத்திலே விமானங்கள் அதிகமாய் வரவில்லை; வரவர நின்றுவிடலாம். சென்ற மாதத்தில் 3,500 தடவை விமானங்கள் வந்து ஒவ்வொரு தடவையிலும் 200 டன் வெடிகளைப் போட்டுப் பார்த்தாய்விட்டது. லண்டன் பிடிபடவில்லை. இது சாத்தியமென்றும் தோன்றவில்லை. ஆரம்பத்தில் இங்கிலாந்தின் தென்கரைகளைப் பிடிக்கப் பார்த்தது வீணாயிற்று. பிறகு பிரிடிஷ் விமானப்படையை பலஹீனப்படுத்தச் செய்த முயற்சி வீணாயிற்று; இப்பொழுது லண்டனைப் பிடிக்கச் செய்த பிரயத்தினமும் வீணாய்விட்டது. ஒரு மாதமாக, ஓயாது, விமானங்கள் எதிர்த்துவந்தபோதிலும், தொழிற்சாலைகளில் சாமான்கள் வழக்கம்போல் செய்து உலகமெங்கும் ஏற்றுமதியாகின்றன.

விமான எதிர்ப்புக் கடுமையாயிருந்த இடங்களில்கூட பழுதுபட்ட தொழிற் சாலைகள் அதிவிரைவாய்ச் சீர்திருத்தப்பட்டு முன்னைவிட அதிகமாய் சாமான்களைத் தயாரிக்கின்றன. உதாரணமாக லண்டன் கீழ்பாகத்திலிருக்கும் ஒரு தொழிற் சாலையை எடுத்துக்கொள்ளுவோம். இதில் 1200 ஆட்கள் வேலை செய்கிறார்கள். தச்சுவேலை, இரும்புவேலையெல்லாம் நடக்கிறது. வேலைக்காகச் சாமான்கள் ஏராளமாய்ச் சேர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன. இதன்மேல் வெடிகள்விழுந்து சேர்த்துவைத்திருந்த சாமான்களும் சக்தி உற்பத்திசெய்யும் இன்ஜினும் அழிந்து போயின. ஆனால் இரண்டுதினங்களுக்குள், ஏற்கனவே, உற்பத்தி செய்ததில் 100-க்கு 70 பாகம் சாமான்கள் செய்யக்கூடிய நிலைமைக்கு, தொழிற்சாலை சரிப்படுத்தப்பட்டுவிட்டது. வெகுசீக்கிரத்தில், முன்னைவிட அதிகமாகவே சாமான்கள் செய்யக்கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போது இருக்கும் யுத்த நிலைமையைப்பற்றி ஸ்டிராடஜிகுஸ் பின்வருமாறு எழுதுகிறார்:—“டன்கர்க்கில் பிரிடன் செய்த போரானது என்றுமழியாப் புகழ் பெற்றது. டன்கர்க்கு யுத்தம் முடிந்து நாலுமாதங்களாய்விட்டன. போலண்டு பெல்ஜிய நாடுகளை மூன்றுவாரத்திலும், பிரான்ஸை ஐந்துவாரத்திலும் முறியடித்த ஜெர்மனி நாலுமாதங்களாகியும் பிரிடனை வெல்லமுடியவில்லை. இதாலியும் சும்மாயிருக்கிறது. இதே பிரிடனுக்கு ஒரு வெற்றியாகும்.

மேலும், ஜெர்மனியும் இதாலியும் சேர்ந்துகொண்டதிலிருந்து, தங்களுக்கு நிகர் உலகத்தில் ஒருவரும் இல்லையென்கிறார்கள். ஆனால் 4-மாதங்களாகியும், அரட்டலைத்தவிர, காரியத்தில் ஒன்றையும் காணோம்.

தான் பிரிடன்மேல் இன்னும் படை எடுக்கவில்லையென்று, வேணுமானால், இதாலி சாக்குச் சொல்லலாம். ஜெர்மனியோ, தனக்குக் கப்பல்படை போதாது

என்று அறிந்து, பிரிட்டிஷ் விமானப்படையைத் தோற்கடித்து, பிறகு பிரிடனைப் படையெடுக்க ஏற்பாடுகள் செய்தது. தன்னுடைய விமானப்படையை ஒருவராலும் வெல்லமுடியாதென்றும் சொல்லிக்கொண்டது. ஆனால் முதல் மாதத்திலேயே 1,400 விமானங்களையும், 3,000 விமானிகளையும் இழந்துவிட்டது. பிரிடனுக்கோ 407 விமானங்களும், 217 விமானிகளும்தான் நஷ்டம். மேற்கொடுத்த கணக்கு ஸெப்டம்பர் முதல் வாரத்தோடு முடியும், ஒரு மாதத்தியது. இதன் பிறகு இரவில் திருடர்களைப்போல் விமானங்கள் வரத் தொடங்கின. இதுவே ஜெர்மனியின் பலக்குறைவை வெளிப்படுத்துகிறது. ஆகஸ்டு 11லிருந்து ஸெப்டம்பர் முடிய ஜெர்மானியர் 2,116 விமானங்களைத் தோற்றுவிட்டார்கள். பிரிடனுடைய நஷ்டம் 591 விமானங்கள்தான். ஜெர்மன் விமானிகள் ஏராளமாய் இறந்துவிட்டார்கள். இது ஜெர்மனிக்கே ஒரு பெரிய விபத்தாகும். ஏனெனில், இந்த நான்கு மாதங்களில் 4,000, 5,000 விமானிகள் கொல்லப்பட்டிருக்கவேண்டும். பிரிடனுக்கு 280 விமானிகள்தான் நஷ்டம்.

மாரிகாலம் வந்துவிட்டதால், ஜெர்மனிக்கு புது விமானிகளைப் பழக்க முடியாது. பிரிடனுக்கோ, கனடாவில் விமானிகளைப் பழக்கிக்கொள்ளலாம்.

ஆகவே, இது வரையில் நடந்த மகாயுத்தத்தில் பிரிடன் ஜெர்மனியைத் தோற்கடித்துவிட்டது. பிரிடனுடைய சைன்ய பலம் இப்பொழுது வேகமாய் வளர்ந்துகொண்டு வருவதிலிருந்து இனி இதற்கு மேற்பட்ட வெற்றிகளையும் எதிர்பார்க்கலாம்.

மூவரசு உடன்படிக்கையிலிருந்து ஏற்பட்டிருக்கும் சம்பவங்கள்.—இதிலிருந்து ஜப்பானை பிரிடன் வெறுத்து, அக்டோபர் 17லிருந்து பர்மா பாதையைத் திறந்துவிடப்போவதாக பிரிடிஷ் பிரதம மந்திரி சொல்லிவிட்டார். யுனைடெட் ஸ்டேட்ஸ் கப்பல் படை அதிகாரி, 'ஜப்பான் சண்டைக்கிழுத்தால், நாங்கள் தரையிலும், கடலிலும் சண்டை செய்யத்தயார்' என்கிறார். அமெரிக்க நாடுகளுக்குள் தற்காப்புக்காக யுத்த நிலையங்களைப்பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டுவருகின்றன. ரஷியாவோடு யுனைடெட் ஸ்டேட்ஸ் கலந்து பேசிக் கொண்டிருக்கிறது. ஆகவே இப்பொழுது நடந்து வரும் தீவட்டிக்கொள்ளையை நிறுத்த அமெரிக்கா தீர்மானித்துவிட்டது. எந்த க்ஷணத்திலும் யுத்தத்தில் இறங்கிவிடலாம்.

ருமேனியா.—இதில் அக்கப்போர் மறுபடியும் ஆரம்பித்து விட்டது. ஜெர்மன் துருப்புகளும், சில பீரங்கிகளும் ருமேனியாவுக்கு வந்துகொண்டிருப்பதாகப் பிரஸ்தாபம். இரண்டு படைகள், மோட்டார் ஸகிதமாய் புறப்பட்டுவிட்டனவாம். இவர்கள் ருமேனியத்துருப்புக்களைப் பழக்கிவைக்க வருகிறார்களென்று சொல்லுவது பொய்; அதற்கு இத்தனைபேர்கள் வேண்டாம். அங்கு இருக்கும் எண்ணெய்க் கிணறுகளைப் பிடிக்கவோ, அதன் வழியாக டான்யூப் கீழ் பாகத்தையும், கருங்கடலையும் நாடிப்போகவோ வரலாம். சைன்யங்கள் மோட்டாரில் ஏறிச்செல்ல ஒரு பாதை போடவும், கருங்கடலில் ஒரு விமான-நிலயம் கட்டவும் ஜெர்மானியர் காண்ட்ராக்ட் எடுத்துக்கொண்டிருக்கிறார்களாம்.

எகிப்து.—பாலஸ்தீனம், இந்தியா நாடுகளில் வசிக்கும் மகம்மதியர்களின் மதத்தலைவர்கள் இதாலியைச் சபித்து மதப்போர் செய்ய ஆக்ஞாபித்திருக்கிறார்கள் 10,000 முஸ்லிம் மாணவர்கள் கற்றுவரும் ஸர்வகலாசாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் எகிப்தை இதாலி படையெடுத்ததிலிருந்து இவர்களுக்கு இந்தக் கோபமேற்பட்டிருக்கிறது. ஹைபாவில், சவக்குழிகள் மேல் வெடிகளைப்போட்டதற்காக பாலஸ்தீனத்தில் முஸ்லிம் சங்கம் இதாலியைக்கண்டித்திருக்கிறது. எகிப்தில் முஸ்லிம் (ஸெனுஸி) மதாசாரியார் இதாலிமேல் மத யுத்தம் செய்து, அதைக் கண்டிக்கவேண்டுமென்று ஆக்ஞாபித்திருக்கிறார்.

ஸிரியா.—இதாலியர்கள் அனுப்பிய சமாதான கோஷ்டியின் பிரயத்தனங்களொன்றும் பலிக்கவில்லை. பிரஞ்சு கவர்னர் விமானங்களையும் விமான நிலையங்களையும் கொடுக்கவும், சைன்யங்களைக்குறைக்கவும் மறுத்துவிட்டார். தூது சென்றவர்களில் 5 பேர்களை மாற்றியாய்விட்டது.

டமாஸ்கஸ் தெருவுகளில் தூதுகோஷ்டி அங்கத்தினர்கள் கல்லெடுத்து அடிக்கப்படுகிறார்களாம்; இவர்களைப் பார்த்தவுடன் அராபியர்கள் கத்தியைத்தீட்டுகிறார்கள். ஏடனில், ஒலிபரப்பும் காலங்களில், இதாலியின் பெயரைக்கேட்டவுடன் 'கடவுள் இவர்களைச் சபிக்கட்டும்' என்று பிரார்த்தித்து முணுமுணுக்கிறார்கள்.

ஸ்பெயின்.—இதன் மந்திரி, முஸோலினியை அக்டோபர் முதல்தேதி பார்த்துவிட்டு 5-ம் தேதி சொந்த ஊர் (மாட்ரிட்) போய்ச்சேர்ந்தார். இதுவரையில் ஸர்வாதிகாரிகளின் வலையில் சிக்கினதாகத்தெரியவில்லை.

பிரான்ஸ்.—ஜெனரல் வேகாண்ட், பிரஞ்சு வட ஆபிரிக்காவுக்கு கவர்னராக நியமிக்கப்பட்டு, பிரான்ஸைவிட்டு, ஆல்கியர்ஸுக்குப் போகிறாராம். ஆல்கியர்ஸில் இருந்து அந்தப்பிரதேசத்தைக் கவனித்துக்கொள்ளுவாராம்.

பிரிடன் 1930-ல் சைனாவுக்குக் கொடுத்த வை-ஹை-வையென்ற தீவுக்குச் சமீபத்தில் ஜப்பானிய யுத்தக்கப்பல்கள் வந்து நிற்கின்றன. ஜப்பானியத் துருப்புகள், ஹானாய்யென்ற இந்து சைனாவின் பிரதானப்பட்டணத்தில் வந்து அக்டோபர் 8-ம் தேதி, இறங்கின.

தாய்-லாண்டு.—பிரஞ்சு-இந்து-சைனாவில் கேட்ட இடங்களைக் கொடுக்க விஷி-அரசாங்கம் மறுத்துவிட்டது. இதற்காக தாய்-லாண்ட் எல்லைப்புறங்களில் சைன்யங்களை நிறுத்திக்கொண்டு ஆர்பாடம் செய்ததாம். தாய்-லாண்டுக்காக கட்டப்படும் விமானங்களை இனி விற்க அமெரிக்கா மறுத்துவிட்டது.

பிரிடன்.—பிரிடிஷ் மந்திரி சபையில் மாறுதல்கள் சில ஏற்பட்டிருக்கின்றன. இவைகளில் முக்கியமானது சேம்பர்லின் ராஜீய-காரியங்களிலிருந்து விலகிக் கொண்டதாகும். இதிலிருந்து சமாதானப்பேச்சும் பிரிடனில் குறைந்துவிடும்.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
30—9—40: (திங்கட்கிழமை.)			
	கிளிங்கன்பர்க் (Klingenberg), மேற்கு (West) மின்சார உற்பத்தி ஆலைகள், ரயில் பாதைகள், ஆலைகள், இன்னும் மற்ற ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—பெர்லின் (Berlin) பிரதேசம்.	......	எங்கும் தீப்பிடித்தது வெடிச்சத்தங்கள் கிளம்பின. அதிகச்சேதம்.
	எண்ணெய் சுத்திசெய்யும் ஆலைகள்.—லூனா (Leuna), ஹானோவர் (Hanover)	......	தீப்பிடித்தன.
	விமான உற்பத்திச்சாலை.—ராட்டன்பர்க்.		
	வெடிமருந்து ஆலை.—மாக்டீபர்க் (Magdeburg).		
	சாமான் கிடங்குகள், ரயில்பாதைகள்.—ப்ரமன் (Bremen), எராங் (Ehrang), ஆஸ்னாப்ருக் (Osnabruck), மான்ஹீம் (Monheim), ப்ரஸ்ஸெல்ஸ் (Brussels).	......	சீர்குலைந்துபோயின. வெடிமருந்துகள் ஏற்றிச்செல்லும் ரயில்வண்டி ஒன்று தீக்கிரையாய் விட்டது
	கப்பல் நிற்குமிடங்கள்.—சக்ஸ்ஹாவன் (Cuxhaven), ஆம்ஸ்டர்டாம் (Amsterdam).		
	துறைமுகங்கள்.—ஆஸ்டெண்ட் (Ostend) டன்கர்க் (Dunkirk), கலே (Calais), புலாயின் (Boulogne), லாஹவேர்	......	தீப்பிடித்தன.
	கப்பல் நிற்குமிடங்கள், சாமான் கிடங்குகள்.–ஆஸ்டெண்ட் (Ostend).		
	எண்ணெய்க்கிடங்கு.—ஹாம்ஸ்டீட் (Hamstede) விமான நிலயம்.	5 விமானங்கள்.	......
1—10—40. (செவ்வாய்க்கிழமை).			
	வெடிமருந்து ஆலை, ராணுவமுக்யத்வம் வாய்ந்த இடங்கள்.—பெர்லின் (Berlin)	......	பெருத்த நஷ்டம். ஏற்பட்டது.
	மின்சார உற்பத்திச்சாலைகள்.—டூயிபர்க் (Duisburg), கொலோன் (Cologne).	......	நாசமாயின.

தேதி. பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
1—10—40. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.		
எண்ணெய் ஆலைகள்.—ஸ்டர்கிரேட் (Sterkrade), ஹோல்டன் (Holden), கெல்ஸன்கெர்ச்சன் (Gelsenkirchen), கொலோன் (Cologne).	......	தீப்பிடித்தன.
சாமான் கிடங்குகள்.—ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest), வெஸ்டர்ஹால்ட் (Westerhalt), கிரீபர்க் (Greaberg), காப்லென்ஸ் (Coblenz).	......	பெருந்தீ மூண்டது.
கால்வாயில் சிறிய கப்பல்கள் நிற்குமிடங்கள்.—ரூர் (Ruhr) பிரதேசம்.		
விமான உற்பத்திச்சாலை.—ஆம்ஸ்டர்டாம் (Amsterdam).		
7 படையெடுக்க உபயோகப்படும் துறைமுகங்கள்.—இங்கிலீஷ் கால்வாயின் கிழக்குக்கரை.		
பல விமான நிலயங்கள்.—விரோதி ஆக்கிரமித்திருக்கும் நாடுகள்.	3 விமானங்கள்.	
விமான நிலயம்.—மஸாவா (Massawa).	......	6-விமானங்கள்; கட்டடங்களும், பல விமானங்களும் நாசம். வீடுகள் தீக்கிரையாயின.
துறைமுகம்.—லிபியாவிலுள்ள டொப்ரூக்	......	ஒரு கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.
கூரா.—(Gura) ...	1-விமானம்.	புகையும், ஜ்வாலையும் கிளம்பின.
ரயில் பாதை.—குல்டிஹார் (Guldehar).		
ராணுவ கட்டடங்கள்.—பெர்பரா (Berbera).	......	கட்டடங்கள் இடிந்துபோயின.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
2—10—40. (புதன்கிழமை).			
	எண்ணெய் ஆலைகள்.—ஸ்டெட்டின் (Stettin), ஹாம்பர்க் (Hamburg), பொட்ராப் (Bottrop).	......	தீப்பிடித்தன.
	குருப்ஸ் தொழிற்சாலை.—எஸ்ஸன் (Essen)	......	நாசமாயிற்று.
	சாமான் கிடங்கு.—கொலோன் (Cologne).		
	ரயில்வே ஜங்ஷன்.—ஹாமு (Hamm)க் கருகில்.		
	கப்பல் நிற்குமிடங்கள்.—ஹாம்பர்க்(Hamburg), வில்ஹெல்ம்ஷாவன்(Wilhelmshaven).		
	துறைமுகங்கள், கப்பல்கள்-ஆம்ஸ்டர்டாம் (Amsterdam), ராட்டர்டாம் (Rotterdam), ஆண்ட்வெர்ப் (Antwerp), ப்ளஷிங் (Flushing), ஆஸ்டெண்ட் (Ostend), கலே (Calais), செர்பரோ (Cherbourg), உஷாண்ட் (Ushant).	......	சீர்திருத்தமுடியாத படி கெட்டுப் போயின.
	13 விமான நிலயங்கள் — ஜெர்மனி (Germany), ஜெர்மனி ஆக்ரமித்திருக் கும் நாடுகள்.	......	......
3—10—40. (வியாழக்கிழமை).			
	பகலில் விரோதியின் துணைக்காவல் கப்பல் கள்—டன்கர்க் (Dunkirk).	......	அநேகம் சேதமாயின.
	கப்பல்கள்—ராட்டர்டாம் (Rotterdam) துறைமுகம்.	......	......
	சிறிய கப்பல்கூட்டங்கள் — ஹாலந்தி (Holland) லுள்ள ஹ்யூஸ்டென் (Heusden).	......	பல கப்பல்கள் மூழ்கிப்போயின.
	ஒரு தொழிற்சாலை—வீஸலுக் (Wesel) கருகில்.	......	......

தேதி. பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
3—10—40. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.		
ரயில் பாதைகள், எண்ணெய்க் கிடங்குகள்—செர்பரோ (Cherbourg) வுக்கு சமீபத்தில்.	......	......
சாமான்கள் ஏற்றிச்செல்லும் கப்பல்கள்—ஹால்கிஸண்ட் (Halgesund), பியோர்னே வளைகுடா (Bjiorne Fjord).	1 விமானம்.	ஒரு கப்பல் கவிழ்க்கப்பட்டது, மற்றொன்றில் தீப்பற்றியது.
4—10—40. (வெள்ளிக்கிழமை).		
இங்கிலீஷ் கால்வாயில் துறைமுகங்கள்—பிரஞ்சு (French), பெல்ஜியன் (Belgian) கடற்கரைகள்.	......	துவம்ஸம் செய்யப்பட்டன.
ரயில் பாதை—செர்பரோ (Cherbourg)	......	சாமான் போக்குவரத்து தடைப்பட்டு விட்டது.
விரோதி விமான நிலயம் — அப்பீவில் (Abbeville).	......	......
கடற்படை தங்குமிடம், எண்ணெய்த் தொட்டிகள், கப்பல் கட்டுமிடம்—எரிடிரியா (Eritrea) விலுள்ள அஸ்ஸாப் (Assab)	......	சேதமாயின.
மேற்குப் பாலைவனம்—(Western Desert)	......	......
இதாலிய கிழக்கு ஆபிரிக்கா (It. East Africa).	......	......
ரயில் பாதைகள்.—அபிஸீனியா (Abyssinia), எரிடிரியா (Eritrea).	......	டிரிடாவாவுக்குப் போகும் ரயில் பாதை தடைபட்டு விட்டது; அகோர்டட்—மஸாவா ரயில் பாதை சேதமாயிற்று.
ரயில்வே ஜங்ஷன்.—ஜிபுடி (Jibuti)—அடீஸ் அபாபா (Addis Ababa) ரயில் பாதையிலுள்ள எய்ஸ்சா (Aischa) ஜங்ஷன்.	......	......

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
4—10—40. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.			
	வேவு பார்த்தல்.—லிபியா (Libya).	நஷ்டமில்லை.	
	கப்பல்கள், கப்பல் சாமான் கிடங்குகள்.—பென்காஸி (Benghazi).		எங்கும் தீப்பிடித்தது, சிறிய கப்பல்கள் மேல் குண்டு வீழ்ந்தது.
	சிறிய கப்பல்கள்.—டொப்ருக் (Tobruk) துறைமுகம்.	......	பெருத்த சேதம் விளைந்தது.
	ராணுவ சாமான்கள்.—பார்டியா (Bardia).	......	......
5—10—40. (சனிக்கிழமை).			
	எண்ணெய் ஆலை.—கெல்ஸன்கர்ச்சன் (Gelsenkirchen).	......	எங்கும் தீ சூழ்ந்தது.
	குருப்ஸ் (Krupps) தொழிற்சாலை.—எஸ்ஸன் (Essen).	......	2 டன் நிறையுள்ள வெடி குண்டுகள் எறியப்பட்டன.
	சாமான் கிடங்குகள்.—ஹாம் (Hamm), கொலோன் (Cologne), ஆஸ்னப்ருக் (Osnabruck).	......	தீச்சுடரும், வெடிச் சத்தமும் கிளம்பின.
	கப்பல்கள், சாமான் கிடங்குகள்.—ராட்டர்டாம் (Rotterdam), ப்ரெஸ்ட் (Brest).	......	அநேகம் மூழ்கின.
	மோட்டார் வண்டிகள்.—க்ரேவ்லைன்ஸ் (Gravelines).	......	அநேகம் சேதமாயின.
	கப்பல் நிற்குமிடங்கள்.—ஆம்ஸ்டர்டாம் (Ameterdam), ப்ளஷிங் (Flushing).	......	......
	விமான நிலயங்கள்.—ஷீபால் (Schipol), டெக்ஸல் (Texel), ஆல்டிப்ரோயக் (Aldebroek), புஸ்ஸம் (Bussum).	......	படு சேதமாயின.
	படையெடுப்புத் துறைமுகங்கள்.—இங்கிலீஷ் கால்வாயின் கீழ்க்கரையிலுள்ள துறைமுகங்கள்.	3 விமானங்கள்	

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
6—10—40 (ஞாயிற்றுக்கிழமை).			
	பகலில்.—சமுத்திரக்கரையிலுள்ள ராணுவ முக்கியமான இடங்கள், கப்பல்கள், வடக்கே ஹார்லிங்கனிலிருந்து தென்மேற்கில் புலாயின் (Boulogne) வரை—முக்கியமாக கலே (Calais), கார்னுட் (Carnot), புலாயின் (Boulogne), ஆஸ்டெண்ட் (Ostend), டார்டிரெக்ட் (Dordrecht), டென்ஹெல்டர் (Denhelder).	......	பெருஞ்சேதம் விளைந்தது; அநேகம் துறைமுகங்கள் உபயோகமில்லாமற் போய் விட்டன.
	சாமான் ஏற்றிச் செல்லும் கப்பல்கள்.—ஹார்லிங்கன் (Harlingen), மாஸ் (Maas) நதி, ஸ்டாவோரென் (Stavoren), என்ஹியூஸென் (Enhuizen) என்கிற ஸ்யூடர்ஸீ (Zuider Zee) துறைமுகங்கள்.	......	பல மூழ்கின; மற்றும் பல தீக்கிரையாயின.
	விமான நிலயங்கள்.—டீப்ஹோல்ஸ் (Diepholz) மேற்குஜெர்மனி (Germany).	நஷ்டமில்லை.	சேதமாயின. 1 விமானம்.
	இரண்டு சிறிய யுத்தக்கப்பல்கள்.—டச்சு (Dutch) கடற்கரை.	1 விமானம்.	

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	பிரிடிஷாரின் நஷ்டமும், அவற்றின் விளைவுகளும்.
1—10—40. (செவ்வாய்க்கிழமை).			
	காலையில்.—லண்டன் (London) பிரதேசம்.	......	......
	சிலபட்டணங்கள்.—தென்கிழக்கு இங்கிலாந்து.	......	சொற்பச்சேதம்.
	பகலில்.—தென் இங்கிலாந்து (England) வேல்ஸ் (Wales) கடற்கரையிலும், ஸர்ரேயிலும் (Surrey) சில இடங்கள்.	......	பலருக்குக் காயம்.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	பிரிடிஷாரின் நஷ்டமும், அவற்றின் விளைவுகளும்.
1—10—40. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.			
	இரவில்.—லண்டன் (London), மர்ஸி ஸயிட் (Merseyside), எஸ்ஸெக்ஸ் (Essex) தென்கிழக்கு இங்கிலாந்து (England).	4 விமானங்கள்.	பல இடங்களில் தீப் பிடித்தது, ஆனால் உடனே அணைத்து விட்டார்கள். சில கட்டடங்கள் சேதமாயின. சிலருக்குக் காயம். 3 விமானங்கள்.
	ஏடன் (Aden)	1 விமானம்.	சேதமேயில்லை.
2—10—40. (புதன்கிழமை).			
	பகலில்.—லண்டன் (London) (6 தரம் விமான அபாய எச்சரிக்கை), தென் கிழக்கு இங்கிலாந்து (England), தெற்கு வேல்ஸ் (Wales), எஸ்ஸெக்ஸ் (Essex), கெண்ட் (Kent) கடற்கரை, ஸஸ்ஸெக்ஸ் (Sussex) கடற்கரை பட்டணம் ஒன்று.	......	சில வீடுகளும், கடைகளும் இடிந்தன, சிலருக்குக் காயம், சிலர் மாண்டனர்.
	இரவில்.—லண்டன் (London), தென் கிழக்கு இங்கிலாந்து (England), வடமேற்கு இங்கிலாந்து, ஸ்காத்லாந்து (Scotland), வேல்ஸ் (Wales).	...... 12 விமானங்கள்	சில இடங்களில் தீப் பிடித்தன; ஆனால் சேதம் உண்டாகவில்லை. சிலருக்குக் காயம். 1 விமானம், ஆனால் விமானி பத்திரமாயிருக்கிறார்.
3—10—40. (வியாழக்கிழமை).			
	பகலில்.—லண்டன் (London) பிரதேசம், மிட்லண்ட்ஸி (Midlands)ல் ஒரு பட்டணம், ஹோம் கவுண்டீஸ் (Home Counties), தேம்ஸ் (Thames) நதி பள்ளத்தாக்கு, எஸ்ஸெக்ஸ் (Essex), கெண்ட் (Kent), கார்ன்வால் (Cornwall)	......	காயம்பட்டவர்கள் சொற்பந்தான். பல கட்டடங்கள் இடிந்தன. முக்கியமான சேதம் ஒன்றும் இல்லை.
	இரவில்.—லண்டன் (London), இங்கிலாந்தி (England)ன் சில பாகங்கள்.	...... 1 விமானம்.	சேதமுமில்லை, காயமும் ஒருவருக்கும் இல்லை, நஷ்டமில்லை.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	பிரிடிஷாரின் நஷ்டமும், அவற்றின் விளைவுகளும்.
4—10—40. (வெள்ளிக்கிழமை)			
	பகலில்.—(அங்குமிங்கும் ஒவ்வோர் விமானம் தென்பட்டது) லண்டன் (London), தென்கிழக்கு இங்கிலாந்து (England).	......	சிலருக்குக் காயம், அதில் சிலர் மாண்டனர். ஒரு விமானமும் லண்டனை அணுகவில்லை.
	இரவில்.—லண்டன் (London), இங்கிலாந்தி (England)ல் சில இடங்கள்.	3 விமானங்கள்	1 விமானம்.
5—10—40. (சனிக்கிழமை).			
	காலையில்.—கெண்ட் (Kent), ஸஸ்ஸெக்ஸ் (Sussex) கடற்கரை, கெண்டிலு (Kent)ம், ஸஸ்ஸெக்ஸிலு (Sussex)ம் சில பட்டணங்கள், தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், லண்டனி (London)ன் சுற்றுப்புறங்கள்.	......	பல கட்டடங்கள் இடிந்தன; ராணுவ நஷ்டம் எதுவுமில்லை. சிலருக்குக் காயம்; சிலர் இறந்தனர். சொற்பச்சேதம்.
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம், கிழக்கு கௌண்டீஸ் (Counties), தென் கிழக்கு இங்கிலாந்து.	24 விமானங்கள்.	9 விமானங்கள், 7 விமானிகள் பத்திரம். சில இடங்களில் தீப்பிடித்தது; சீக்கிரம் அணைத்து விட்டார்கள்; சேதமில்லை.
	மால்டா (Malta), மார்ஸா மாத்ரூ (Mersa Matruh).	2 விமானங்கள்	விரட்டி அடிக்கப்பட்டன.
6—10—40. (ஞாயிற்றுக்கிழமை).			
	பகலில்.—(தனித்தனியாக விமானங்கள் படையெடுத்தன), லண்டன் (London) பிரதேசம், தென் கிழக்கு இங்கிலாந்தி (England)ல் சில இடங்கள், கிழக்கு மிட்லண்ட்ஸ் (Midlands), கிழக்கு ஆங்கிலியா (Anglia).	......	மிக சொற்பச்சேதம்; சிலருக்குத்தான் காயம்.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	பிரிடிஷாரின் நஷ்டமும், அவற்றின் விளைவுகளும்.
6—10—40: (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.			
	இரவில்.—படையெடுப்பில்லை.	1 விமானம்.	லண்டனில் படையெடுப்பேயில்லை. நஷ்டமில்லை.
7—10—40 (திங்கட்கிழமை).			
	பகலில்.—கெண்ட் (Kent) கடற்கரை, இங்கிலாந்தி (England)ன் கிழக்கு, தெற்கு பாகங்கள், ஈஸ்ட்போர்ன் (Eastbourne), டோவர் (Dover), தென்மேற்கு இங்கிலாந்திலு (England)ம், கெண்டிலு (Kent)ம் சில பட்டணங்கள்.	......	"பிரிடனின் போர்" மறுபடியும் ஆரம்பமாயிற்று. முக்கியமான சேதமில்லை; சிலருக்குத்தான் காயம்.
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம், லண்டனி (London)ன் சுற்றுப்புறங்கள், இங்கிலாந்தி (England)ன் வடமேற்கு, மேற்கு, தென்கிழக்குப் பாகங்கள், லிவர்பூல் (Liverpool), மிட்லண்ட்ஸ் (Midlands), தென் கிழக்கு ஸ்காட்லாந்து (Scotland).	27 விமானங்கள்.	அநேக இடங்களில் தீப்பற்றியது; ஆனால் சீக்கிரம் அணைக்கப்பட்டுவிட்டது; சொற்பசேதம்; 16 விமானங்கள், 10 விமானிகள் உயிர் தப்பினர்.

அனுபந்தம் 1.

பக்க நோக்கங்கள்.

---

1. இதுவரையிலுள்ள குற்றத்தொழிலார்களில் வெகுத்தேர்ந்தவன் யார்?

நீரோ என்றவன் தீயவன்தான்; அவ்வாறே பயங்கரமுள்ளவன் இவான் என்பவனும். ஆனால் ஹிட்லரோ இவ்விருவர்களையும் நிச்சயமாகத் தோற்கடித்துவிட்டான்.

அவனுடைய தீச்செயல்களில் இரண்டு மற்றவைகளைக் காட்டிலும் க்ஷமிக்கத்தகாதவை. ஏனெனில் அவைகளுடைய கொடும்பலனும் வெகு காலம் நிற்கக்கூடியதாகயிருக்கிறது. அவைகளில் முதலாவது என்ன வென்றால், ஒரு தலைமுறையிலுள்ள ஜர்மானிய யுவர்களின் ஆத்மாக்களுக்கு விஷமிட்டுக்கெடுத்தான். தீமையின் அவதாரத்திற்குப் பகுத்தறிவின்றி உதவி புரிந்து கொடுஞ் செயல்களில் களிக்கும் அசேதன யந்திரங்களாக அவர்களைச் செய்தான். அவர்கள்தான் கைதுமுகாங்கள் என்ற நாகங்களுக்குக் காப்பாளர்கள். 18-வயது முதல் 22-வரை உள்ள இந்த நாஸி வாலிபர்கள்தான் சாட்டைகொண்டு அடிப்பவர்கள், சித்திரவதை செய்பவர்கள், கொலையாளிகள். ஹிட்லர் அவனுடைய நாஸிசிஷ்யர்களுக்குக் கற்பித்திருக்கும் இரண்டாது உபதேசம் என்னவென்றால் யுத்தத்தில் நல்லொழுக்கம் தண்டிக்கத்தக்க பேதமையென்பது. சென்ற யுத்தத்தில் ஜெர்மானிய விமானிகளும், சிப்பாய்களும் நல்லொழுக்கத்துடன் யுத்தம் செய்தார்கள். இப்பொழுதோ சுரங்கத்தாலோ, டார்பிடோவினாலோ உடைந்துபோன கப்பலில் தத்தளிக்கும் செம்படவர்களைத் துப்பாக்கிகளால் சுடுகிறார்கள். தள்ளுமுள்ளாக நிற்கும் குழந்தைகள் பேரிலும், நொண்டி முடங்களின் பேரிலும் குண்டுகளை வீசுகிறார்கள். அவர்களுடைய டாங்கிகள் சண்டை செய்யாத சாதாரண மனிதர்களையும் நசுக்கிக்கொண்டு செல்லுகின்றன. இந்த ராக்ஷஸமயமான பிராந்தியிலிருந்து ஜெர்மானியர் எப்பொழுதாவது விழித்தெழுந்திருப்பார்களா? மனிதர்களுடன் கலந்து புழங்குவதற்குத் தகுந்தவர்கள் என்று எப்பொழுதாவது கருதப்படுவார்களா? இல்லையேல், அடால்ப் ஹிட்லரே அதற்கு ஜவாப்தாரி என்று சரித்திரம் தீர்ப்பளிக்கும்.

* * *

2. இங்கிலாந்தில் ஜெர்மானியர் வெடிகுண்டு வீசுவது வர்ஜா வர்ஜமில்லாது நடக்கிறது என்று ஜெர்மானிய பத்திரிகைகள் தவறியோ, வேணுமென்றே ஒப்புக்கொள்ளுகின்றன. ஒரு தேசத்தை பயமுறுத்தவேணும்

என்பதையே முக்கியக் கொள்கையாக ஜெர்மானியர் அநுஷ்டிக்கிறார்கள் என்று நாமும் நடுநிலை நாடுகளும் சொன்னதை வெகுநாளாக ஜெர்மானியர் மறுத்துவந்தார்கள். ஆனால், டாக்டர் கோயபல்ஸ் பிரப்ருதிகளும் மறுத்து வந்தார்கள். இப்பொழுது அவ்வாறு பயமுறுத்த முடியாமல் போனதில் ஏற்பட்ட குரோதத்தால், அவர்கள் தம் தீயசெயல்களைப்பற்றி, பெருமை பேசுகிறார்கள்.

ஸெப்டம்பர் 18-ம்வ ஜேர்மன் ஒலி பரப்புகள்.

"லண்டனில் வீடிழந்த மக்களின் திண்டாட்டம் நாளுக்கு நாள் அளவுகடந்து அதிகரிக்கிறது"

"நகரத்தின் பல பாகங்களிலும் முக்கியமாக கர்ஜான் தெருவிலும் தீ பரவியது (கர்ஜான் தெருவென்பது வாஸத்துக்கு மட்டும் உபயோகிக்கப் படும் இடம். லண்டன் தெருக்களில், மேற்கண்ட கர்ஜான்தெரு யாதொரு ராணுவ தளவாடங்களில்லாத ஸ்தலம்).

ஸெப்டம்பர் 14வ "ஆளும் வகுப்பினரும் ஈஸ்டு எண்டு என்று கூப்பிடப்படும் கீழ் பாகத்திலிருக்கும் ஏழைகளைப்போல அபாயத்திற்குள் ளாக வேண்டியது நியாயமே."

ஸெப்டம்பர் 13வ "நூற்றுக்கணக்கான சினிமாக்களும், நாடகசாலை கள்ளும் அழிக்கப் பட்டன."

சத்துருவின் சௌர்யம் என்னே!

* * *

படையெடுப்பு ??

3. எப்பொழுதும் வழக்கமாயுள்ள நிலைமையைக் காட்டிலும் வெகு நேர்த்தியான வேனிற் காலநிலையிருந்தாலும் ஜெர்மானியர்கள் அந்த ஸமயம் படையெடுக்க முடியாமல் பிரிடிஷ் விமானிகளின் ஊக்கத்தாலும் சௌர்யத் தாலும் தடுக்கப்பட்டார்கள். சீதோஷ்ண நிலைகளும் மாறிவிட்டன. அதிலிருந்து சிலர் படையெடுப்பு பயம் ஒய்ந்தது என்று நினைக்கிறார்கள். அது தவறு. மாரிகாலப்புயல்கள் அடிக்க ஆரம்பிப்பதற்கு முன் அமைதி உள்ள ஸமயங்கள் பல ஏற்படும். அமைதியுள்ள கடலில்தான் படை யெடுப்பு ஸாத்தியம்; ஜாஸ்தி பாரமேற்றப்பட்ட மோட்டார் படகுகள் ஒரு மணிக்கு 8 Knot. ($8\frac{1}{2}$ மைல்)க்கு மேல் செல்லமுடியாது. ஆகையால் அக்டோபர்மீ முதல்வக்கு பிறகு பதினாயிரக்கணக்கான பிரிடிஷ் சிறிய கப்பல்கள் பதினாயிரக்கணக்கான ஜெர்மானிய சிறு கப்பல்களுடன் யுத்தம் செய்யும் ஸந்தர்ப்பம் வெகுகுறைவாகவே யிருக்கிறது. (மகத்தான இரு கடற்படைகளுக்கும் பெரிய யுத்தம் நடப்பதற்கில்லை. ஏனெனில் ஜெர்மானிய ரிடம் அப்படிப்பட்ட கடற்படையில்லை).

ஆனால் வானத்திலோ? தாக்குபவர்களுக்கு மேக நெருக்கமுள்ள ஆகாயம் நல்லதென்று சொல்லுவார்கள்; பார்வை வஸதி குறைவுதான், மறைந்து கொள்ளும் வஸதி அதிகம், பிரிடிஷ் விமானப்படையை வீழ்த்துவதற்காக ஜெர்மன் விமானப்படை பல புதிய பிரயத்தனங்கள் செய்து பார்க்கும் என்பது ஸம்பாவிதம். (பிரிடிஷ் விமானப்படை பலம் தொடர்ச்சியாக மேலோங்கி நிற்பதனால் படையெடுப்பு ஸம்பாவிதம் குறைந்துவிட்டது). ஆயினும் இவ்வாறு இருண்ட மேகங்களடர்ந்த ஆகாயம் இருந்தால், இப்பருவத்தில் உக்கிரமான புயல்களடிக்கும். படையெடுப்பணிகளும் கலைத்துச் சிதறிவிடும். புகைக்கூண்டு தடைகளில் (Balloon-barrages) அகப்பட்டுக் கொள்வார்கள்; வானச்சண்டைகள் நடக்கையில் விமானங்கள் தங்கள் லக்ஷியங்களைவிட்டு அப்பால் மிதந்து போகும்படி நேரிடும். சண்டை ஆரம்பிக்கும் காலத்தில் லண்டன் நகரத்திற்கு மேலிருப்பவன் குறிவைத்து வெடிகுண்டை வீச நினைக்கும்காலை பிரிடிஷ் ஜலஸந்திக்கு மேல் பறந்துகொண்டு இருப்பான். ரூடியாக கவனித்தால் படையெடுப்பு இன்னும் முடியவில்லை. ஆனால் பகைவனும் யுக்தமற்ற கார்யங்கள் செய்ய இன்னும் ஸ்வல்பம் முகாந்திரம் இருக்கலாம். அல்லது மற்றொரு விதமாக அந்த விஷயத்தையே சொல்வதென்றால் பகைவன் படையெடுக்கும் ஸந்தர்ப்பங்கள் முன்பைக் காட்டிலும் இப்பொழுது (1) வெகு குறைவாகவும் (2) அவனுக்கு நஷ்டகாமாகவும் இருக்கின்றன.

* * *

4. ஆபிரிக்காவில் யுத்த நடை மந்தமாகயிருப்பதை கவனிக்குங்கால் எகிப்தில் நாம் கைகொண்ட தந்திரம் நாமாக எடுத்துக்கொண்டதே ஒழிய சத்துருவால் நம்பேரில் சுமத்தப்பட்டதல்ல. இதாலிய போக்குவரவுகள் நீளமாக ஆக ஆக அவைகளின் பலஹீனமும் விருத்தியாகிக்கொண்டே வருகிறது. அவர்களுடைய பகைவர் கூட்டங்களுக்கு மத்தியில் (உதாரணமாக லிபியாவிலுள்ள முக்கியமான கூட்டத்தாரான ஸென்ஸ்ஸீ என்பவர்கள்) இதாலியப்படை சிதறிக்கிடக்கிறது. பிரிடிஷ் படையும் ஒரே சீராக விருத்தியாகிக்கொண்டே வருகிறது. அவர்களும் பொறுக்கி எடுக்கப்பட்ட தற்காப்புத்தளங்களில், வெகு ஸமீபமும், நன்ருக சோதிக்கப்பட்டவையுமான போக்குவரவு வஸதிகளுடன் ஸ்தாபித்துக்கொண்டிருக்கிறார்கள்.

* * *

5. இவ்வளவு தடபுடலாக ஐரோப்பாவில் ஓடித்திரியும் திரு. ஸூனர் என்பவரைப்பற்றிச் சில விசித்திரமான விஷயங்கள் தெரிகிறது. அவர் ஸேனாபதி பிராங்கோவின் மைத்துனர். ஸ்பெயினிலுள்ள "பலாங்கிஸ்டு" என்ற ஏகாதிபத்யக்கக்ஷியாரின் தலைவர். ஆனால் அவர்களுக்குள் அவ்வளவு அந்யோந்யம் இருப்பதாக யாதொரு சின்னங்களையும் காணோம். பிராங்கோவுக்கு பதிலாக ஸூனர் இருந்தால் நலம் என்று ஜெர்மனி நினைக்கிறது.

ஆனால் ஸ்பானியர்களோ மூன்று வருஷங்களாக மனமாரச்சண்டைபோட்ட பின் பின்னர், இப்பொழுது மறுபடி சண்டைபோடவோ, ஜெர்மனிக்கு வாய்ப்போக்குக் கொடுக்கவோ இஷ்டப்படவில்லை. ஐரோப்பாவின் தலை நகரங்களில் எல்லாம் ஸுனர் சுற்றிப்பார்த்திருந்த ஸமயம் பிரிடனும் ஸ்பெயினும் எண்ணெய் ஒப்பந்தம் செய்துகொண்டதென்பது கவனிக்கத்தக்க விஷயம்.

* * *

6. "நானுனக்கு ஆறு ஸந்தர்ப்பங்கள் கொடுக்கிறேன். நீ ஊஹித்து சரியானபடி சொல்லு" என்று சொல்லவேண்டியிருக்கிறது. எப்பொழுது ருஷியாவானது பிரிக்கவேண்டிய ஒவ்வொரு புதிய பிரச்னை கிளம்பினாலும், யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து, ருஷியாவைப்பற்றிப் பந்தயம்போட்டுக்கொண்ட இருதிறப்பாரும் ஸமமாகவேயிருக்கிறார்கள். ருஷியா இன்ன காரியம் செய்யப்போகிறதென்று ஒரு சிறிய தொகைக்காகப் பந்தயம் கூறினவர்கள் கூட நஷ்டமடைவார்களோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

இது விஷயத்தில் நம் சொந்த இஷ்டங்களைவைத்து நாம் ஊகித்தல் கூடாது. ஒரு விஷயம் நிச்சயமாகத்தெரிகிறது. ருஷியாவின் கொள்கையானது ஸமயானுஸாரியாகயிருக்கிறது. ஆதலால், அது ஸம்பவத்திற்குத் தக்கவாறு மாறிக்கொண்டிருக்கிறது. ருஷியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் பின்வரும் உதாரணங்களை எவ்வாறுவது ஒருங்கே சேர்க்கக்கூடுமாவென்று கவனியுங்கள் :—

பிரிட்டன் விஷயத்தில் இப்பொழுது பழகிப்போன பாதி விரோதமான கொள்கை.

எரிகிற வீட்டில் பிடுங்கினமட்டும் ஆதாயம் என்று நினைத்து ஐரோப்பாவில் ஆதாயம் செய்துகொள்ளுதல்.

பிரிடிஷ் ஸாம்ராஜ்யத்தைத் தாக்கி அழிப்பதற்காக ஜெர்மனிக்கு தைர்யம் கொடுக்க எண்ணங்கொண்டு 1939-ம் ஆகஸ்டுமீ' த்தில் ஜெர்மனியுடன் ருஷியா ஒப்பந்தம்.

யுத்த ஸமயத்தில் போலந்திலும், பால்டிக் ஸமஸ்தானங்களிலும், ருமேனியாவிலும் ருஷியா செய்த ஆக்கிரமணம்.

ருஷியாவுக்குப் பாதகமாக ஜெர்மனி செய்த ஆக்கிரமணங்களுக்கு அநுஸரணை.

ஜெர்மனி இங்கிலாந்தைத் தாக்கமுடியாமல் போகவே இதர பிரதேசங்களைத்தாக்கும் என்று பயங்கொண்டு ஜெர்மனியின் பக்கமாயுள்ள ருஷிய எல்லைகளை யுத்த ஸந்நத்தமாகச் செய்தல்.

துருக்கி தேசத்து தலைநகரான ஆங்காராவில் ருஷிய ஸ்தானிகராக இருந்த திரு. டெரென்டீப்பை "காயலா ரஜா" (?) முடிந்தவுடன் திருப்பியனுப்பாமல் (துருக்கியில் வெகு ஸந்தோஷத்துடன் வரவேற்கப் படும்) திரு. விநோஜகிரடாப் என்பவரை ஸ்தானிகராக நியமித்திருத்தல்.

"பிராவ்டா" பத்திரிகையில் பிரிடிஷ் கடற்படையின் பலத்தைப் பற்றி திருப்பித்திருப்பிச் சொல்வதும், பிரிடிஷாருக்கு ஸாதகமான எண்ணங்களைச்சொல்வது.

இவைகளிலிருந்து நீங்கள் ஏதாவது அர்த்தம் செய்யமுடிந்தால்...... ஆனால் இம்மாதிரி ஸமயத்தில் ஊகிக்கச்சொல்வது வீணான காரியம். ருஷியாவின் புதிருக்கு பதிலாக "ஸமயாநுஸாரிணீ" என்று சொல்வோம். ஆனால் அப்பொழுதும் நாம் பிசகாகப்போகலாம்.

அனுபந்தம் II.

ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

17—9—40.

விமானங்களிருக்குமிடத்தைக் காண்பித்துக் கொடுக்க யந்திரங்கள் உண்டு. இம்மாதிரியான பிரிடிஷ் யந்திரமொன்று டன்கர்க்கு சண்டையில் ஜெர்மானியர் கையிலகப்பட்டு, அவர்கள் அதை சோதித்துப் பார்த்ததில், பிரயோசனமற்றதென்று தெரிந்து கொண்டார்களாம். இதைப்பற்றி ஜெர்மன் ஒலி பரப்பில் பரிகாசம் அதிகமாய்ச் செய்யப்படுகிறது. ஆனால் எதிரிப் பிரதேசங் களில் படையெடுத்து வரும் பிரிடிஷ் விமானங்களுக்குச் சேதமதிகமாகக்காணோம். சமீபத்தில், 8 நாட்களில் 7 விமானங்கள்தான் நஷ்டமாயின. அதிகச்சேதம் என்பது ஒரு சமயத்திலாவது கிடையாது.

லண்டன் மீதும், பிரிடிஷ் கப்பல்கள் மேலும், படையெடுத்த பெருமையை அலங்காரமாய் ஜெர்மனி ஒலிபரப்புகிறது. எல்லாம் வீணாசைதான். பிரிடனுக்கு கப்பல் சேதம் அதிகமாம், உணவுப் பொருள்களும், மற்ற சாமான்களும் பிரிடனில் கிடைப்பது அசாத்யமாய்ப் போய் விட்டதாம்.

இது பொய். யுத்தம் ஆரம்பித்தபோது இருந்த கப்பல்களைக்காட்டிலும் இப்பொழுதிருக்கும் கப்பல்களதிகமென்று ஸெப்டம்பர் 10உ அறிக்கையில் கப்பற்படை இலாகா தெரிவித்திருக்கிறது.

"லண்டன் நகரத்திலிருக்கும் கவன்ட் கார்டன் முதலான மார்க்கட்டுகளில் பண்டங்கள் அபரிமிதமாய்க் கிடைக்கின்றன. இவைகளில் பல அழுகிப்போகக் கூடிய சாமான்கள். இவைகள் முந்திய இரவுதான் கப்பல்களில் வந்து இறங்கி

இருக்கவேண்டும்" என்று ஸெப்டம்பர் 10 தேதியன்று அமெரிக்கர்களான நாஷனல் பிராட்காஸ்டிங் ஸிஸ்டத்தைச் சேர்ந்த ஜான் மாக்கேனும், எச். ஆர். நிக்கர்பாகரும் ஒலி பரப்பியிருக்கிறார்கள்.

இதற்குள் அமெரிக்காவுக்கும், இங்கிலாந்துக்கும் 36-மணி நேரங்களாக ஒலிபரப்பு நின்றுவிட்டதாக ஜெர்மனி மற்றொரு பொய்யைக்கிளப்பிவிட்டது. இதற்குச் சற்று நேரத்திற்கெல்லாம் மேற்சொன்ன அமெரிக்கர்கள் ஒலி பரப்பினார்கள்.

18—9—40.

ஞாயிற்றுக்கிழமை அன்றைக்கும், திங்கட்கிழமை அன்றைக்கும் ஜெர்மனிக்குள் பிரிடிஷ் விமானங்கள் வரவில்லையென்றும், ஜெர்மனிக்குள் பிரிடிஷ் விமானங்கள் வரமுடியாதது இதிலிருந்து வெளியாகிறதென்றும் ஜெர்மனி சொல்லுகிறது.

'உண்மையில், முதல் முதலாக ஒரே ராத்திரியில், இரண்டு முறை விமானப் படையெடுப்பு அன்றுதான் ஜெர்மனியில் எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. அன்று, பெர்லின் நகரத்து வட மேற்கிலுள்ள டெம்பிளாப் விமான நிலயம், சக்தி உற்பத்திச்சாலைகள், முதலிய ராணுவ நிலயங்கள் மேல் வெடிகள் போடப் பட்டன. அதே இரவில் வில்ஹெம்ஸ்ஹேவன், ஹாம்பர்க், வேறு சில ஜெர்மன் துறைமுகங்கள் ரயில்-சந்திக்கும் இடங்கள் முதலியவை தகர்க்கப்பட்டன. திங்கட்கிழமை பிரசுரித்த பிரிடிஷ் அறிக்கைகளில் இந்தப் படை எடுப்பின் விவரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

மழை, பனி ஏற்பட்டதால் திங்கட்கிழமை படை எடுக்காதது வாஸ்தவம். இது செவ்வாய்க்கிழமை ஒலிபரப்பில் சொல்லப்பட்டது. ராணுவ நிலயங்களைத் தான் பிரிடன் எதிர்க்கும். அன்று இரவு அது சாத்தியமில்லாததால் படை எடுக்கவில்லை. ஆனால் கண்டபடி கண்ணை மூடிக்கொண்டு குண்டுகளைப்போடும் ஜெர்மானியர் இதை நம்பமாட்டார்கள்.

நடுநிலை நாட்டு, அதிலும், அமெரிக்க நிருபர்கள் இங்கிலாந்திலிருந்து உண்மையை அறிக்கைகள் மூல்யமாய் வெளிப்படுத்துவது ஜெர்மனிக்குப் பிடிக்க வில்லை. ஏனென்றால், இதனால் இவர்கள் சொல்லும் பொய் எல்லாம் வெளியாய் விடுகிறது. அதிலும், சாமர்த்தியமாயும், ஸ்பஷ்டமாயும் அமெரிக்கர்கள் ரிபோர்ட் செய்வது ஜெர்மனிக்கு கர்ண கடோரமாயிருக்கிறது. இதற்காக, இங்கிலாந்தில் தங்கியிருக்கும் ஸ்வீடன் நிருபர்களைக்கொண்டு, 'அமெரிக்க நிருபர்கள் பொய்க் கதைகளைக்கட்டி விடுவதாக' பிரஸ்தாபிக்கச்சொல்லுகிறார்கள்.

இந்த ஸ்வீடன் நிருபர்களுக்கும் கண்களிருப்பதால் பார்த்ததை மறைக்க இஷ்டமில்லை. 'சமயத்துக்குத் தக்கபடி நடந்து கொள்ளுவதில் லண்டன் வாசிகளின் சாமர்த்தியம் ஆச்சரியத்தைக்கொடுக்கிறது. ஜெர்மன் எதிர்ப்பினால்

லண்டன் விழுந்துவிடுமென்ற பயமே கிடையாதென்று டாகன்ஸ் நிகிடர் என்ற ஸ்வீடன் பத்திரிகையின் லண்டன் நிருபர் ஸெப்டம்பர் 20ல் செய்தி அனுப்பி இருக்கிறார்.

19—9—40.

இதாலிய விமானங்கள் பறந்து வந்து வேவு பார்த்ததிலிருந்து லண்டன் நகரம் முழுவதும் அழிந்து விட்டதாகத் தெரிந்து விட்டதாம். (ஆனால் வங்காள பாஷையில் வந்த ஒலிபரப்பில் 'ஏறக்குறைய' முழு நகரமும் அழிந்து விட்டது என்று மாற்றிக்கொள்ளுகிறது). இதை ஒத்து, 'லண்டன் அடியோடு போய் விட்டதாக' ஜெர்மனி ஸெப்டம்பர் 11ல் ஒலிபரப்பியது. இவர்கள் சொல்லுவது உண்மையானால் ஏற்கனவே லண்டன் இருந்த இடம் தெரியாது போயிருக்க வேண்டும். ஆனால் இந்த ஒலிபரப்புகளுக்கிப்பால் லண்டன் மறுபடியும் எதிர்க்கப் பட்டு ஜெர்மனி 338 விமானங்களைப் பறிகொடுத்திருக்கிறது.

யுத்தத்தில் கைது செய்யப்பட்டவர்களில் அநேகம் பெயர்களை ஜெர்மனி கைவசமிருக்கும் சீதோஷ்ண வசதியுள்ள பிரெஞ்சு பிரதேசங்களுக்கு சௌக்கியமாய் வசிக்க ஜெர்மானியர் கருணைகூர்ந்து அனுப்பி இருக்கிறார்களாம். ஆனால் இவர்களுக்கு சாப்பாடு மட்டும் பிரான்ஸ்தான் போடவேண்டுமாம். சாப்பாடு போடாத கருணை எதற்குப் பிரயோசனம்?

21—9—40.

27 பிரிடிஷ் கம்பெனிகள் இங்கிலாந்திலிருந்து அமெரிக்கா (நியு யார்க்குக்கு) வுக்கு மாற்றப்பட்டுவிட்டதாக ஜெர்மனி சொல்லிக்கொள்ளுகிறது. ஆங்கில ஒலிபரப்பில் இவைகள் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் என்று சொல்லப்படுகின்றன. பெர்ஸிய பாஷையில், இவைகள் யுத்த தளவாடங்கள் விற்கும் கம்பெனிகளென்று மாற்றிச்சொல்லப்பட்டிருக்கின்றன. எவ்விதம் பொய் சொல்லுவதென்று இன்னும் ஜெர்மனி நிச்சயம் செய்துகொள்ளவில்லைபோலும்.

23—9—40.

ஜெர்மனிக்கும் இதாலிக்கும் போட்டிருக்கும் டெலிபோன் பழுதாய்ப்போய் விட்டதுபோலும். செய்திகள் சரியாய்க் கேட்கவில்லையா என்ன? ஏன் ஒருவருக் கொருவர் விரோதமாய் ஒலிபரப்புகிறார்கள்? நேற்றிரவு ஒரு பிரிடிஷ் வெடிகூட ஜெர்மனியில் விழவில்லையென்று ஜெர்மனி சொல்லுகிறது. எதிரிடையாக இதாலி வட-ஜெர்மனியில் அநேக வீடுகள் குண்டுகள் பட்டு சேதமானதாக ஒலிபரப்பு கிறது. எது உண்மை?

இதாலிய சைன்யம் எகிப்தில் முன்னேறுவதாகவும், பிரிடன் திருப்பி எதிர்ப்பதெல்லாம் தடைப்பட்டுப்போனதாகவும் ஜெர்மனி சொல்லிக் கொள்ளுகிறது. உண்மையில் ஸெப்டம்பர் 16ல் ஸிடி-பரானிக்கு வந்த இதாலிய சைன்யம், அதன் பிறகு, அதைவிட்டு நகரவேயில்லை; பிரிடனும் இதுவரையில் திருப்பி எதிர்க்கவுமில்லை.

B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

17—9—40.

பிரிடனுடைய செல்வநிலை கெட்டுப்போய்விட்டதாக இதாலி சொல்லுகிறது. “ஆம் உண்மையேதான். பிரிடிஷ் யுத்த மந்திரி முதலாளிகளையெல்லாம் கடன் கேட்கிறார். ஆனால் முதலாளிகள் கொடுக்கத்தயங்குகிறார்கள்” என்று ஜெர்மன் ஒலிபரப்பு ஊத்துப்பாடுகிறது.

100-க்கு 3 வட்டி வீதம் 300,000,000 பவுன் கடன் முதலில் கோரப்பட்டது. கோரியதற்கதிகமாகவே அதே க்ஷணத்தில் பணம் வசூலாய்விட்டது. 100-க்கு 2½ வட்டி போட்டு, 100-க்கு 100 ரூபாய் வீதம், தேச யுத்த கடன் பத்திரங்கள் அடுத்தபடியாய் விற்கப்பட்டன. இவைகளும் வெகு விரைவில் வாங்கப்பட்டன. மூன்றாவதாக, வட்டியில்லாக்கடன்களை கவர்ன்மெண்டு வேண்ட, 1,867,574 பவுன் கடனாக 949 நபர்கள் இரண்டே தினங்களில் கொடுத்தார்கள். முதல் வாரத்திலேயே 3,350,000 பவுன்கள் வசூலாயிற்று; மேலும் 1,000,000 பவுன் கொடுக்க வாக்களிக்கப்பட்டது. ஜூலை 23-க்குள் 12,874,583 பவுன் வசூலாயிற்று. ‘தேச•செட்டு’ என்ற திரவிய இயக்கம் ஜூலை 20ல் துவக்கப்பட்டு 124,349,557 பவுனுக்கு ‘செட்டு ஸர்ட்டிபிகேட்டு’ களும் 126,334,375 பவுனுக்கு தற்காப்புக் கடன் பத்திரங்களும் விற்கப்பட்டன. இதே காலத்தில் டிபாஸிட்டுகளும் 41,115,314 பவுனுக்கு முன்னிருந்ததைவிட அதிகமாயின. ‘தேச செட்டு வாரம்’ என்ற இயக்கத்தில் 20,000,000 பவுனுக்கு மேல் வசூலாயிற்று. 121,520க்கு மேற் தேச செட்டு ஸபைகள் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கின்றன.

18—9—40.

அலைத்துப் போனவர்களுக்குக் களைப்புத்தீர மருந்தை ஜெர்மன் ரஸாயன பண்டிதர் ஒருவர் கண்டுபிடித்திருப்பதாக இதாலி ஒலிபரப்பியிருக்கிறது. பிரிடனுக்கு அனுப்பிய விமானங்கள் திரும்பவில்லையே என்று, பிரான்ஸ் கடற்கரையில் மார்ஷல் கோரிங் வழி பார்த்து ஏங்கி நிற்கிறார். கண்டுபிடிக்கப்பட்டு இருக்கும் மருந்து வேண்டிய அளவு அவருக்கு அனுப்பித்தால் உபகாரமாய் இருக்கும்.

19—9—40.

‘ஜெர்மனியின் எதிர்ப்பை இனி பிரிடனால் தாங்க முடியாதெ’ன்று நிருபர்கள் சொல்லுவதாக ஜெர்மனி ஒலிபரப்புகிறது. இந்த நிருபர்களுடைய தேசம் குறிப்பிடவில்லை; பத்திரிகைகள் பெயர் குறிப்பிடவில்லை; நிருபர்கள் பெயரும் வெளிவரவில்லை.

‘வாடான்’ என்னும் துருக்கிப் பத்திரிகை பிரிடன் சார்பென்று சொல்ல முடியாது. இந்தப் பத்திரிகை நேற்று, “முன் மார்னில் நடந்த யுத்தத்தைப் போல், இப்பொழுது லண்டனில் யுத்தம் நடக்கிறது. இதில் ஜெர்மனிக்குத் தோல்வி நிச்சயம், யுத்தமானது பிரிடனுக்குச் சௌகர்யமாய் மாறிவிட்டது

என்பது உலகத்தாரின் அபிப்பிராயம்'' என்று எழுதியிருக்கிறது. இதே தேதி (ஸெப்டம்பர் 18)யில் 'டான்' என்ற மற்றொரு தருக்கிப்பத்திரிகை, "விமான எதிர்ப்பால் பிரிடன் மனம் கலங்கவில்லை என்பது நடு நிலை நாடுகளிலிருந்து போய் பார்த்தவர்களின் அபிப்பிராயம். இந்த எதிர்ப்பு பிரிடன் எதிர்பார்க்காத தல்ல. இது ஒரு வருஷமாய் எதிர்பார்த்ததுதான். வெடிகளுக்குப் பயப்படு கிறவர்கள் பிரிடிஷ் மக்கள் அல்ல. 'இங்கு தான் இருக்கிறோம், எங்கும் ஓடிப் போகவில்லை—முடிந்ததை ஜெர்மனி பார்த்துக்கொள்ளட்டும்' என்று பிரிடிஷ் மக்கள் சொல்லுகிறார்கள்'' என்று எழுதுகிறது.

21—9—40.

ஜெனரல் ஜார்ஜ் என்று சொல்லப்படுகிற அமெரிக்கர் ஒருவர் 'ஜெர்மன் விமான எதிர்ப்பை பிரிடன் தாங்க முடியவில்லை' என்று அபிப்பிராயம் கொடுத்து இருக்கிறாராம். இவர் யாரோ அநாமதேயம். கவனித்துப்பார்த்தால், இந்த மாதிரி ஒருவரிருப்பதே சந்தேகமாய்விடும். யுனைடெட் ஸ்டேட்ஸ் ராணுவத் தலைவருக்கு அஸிஸ்டெண்டாகிய ஜெனரல் ஸ்டிராங்கைப்பற்றி ஒருவருக்கும் சந்தேகம் வராது. அவர் பிரிடனை வந்து ஒரு மாத காலமாய்ச் சுற்றிப்பார்த்து, ஸெப்டம்பர் 22ல் பின்வருமாறு எழுதுகிறார்.—"பிரிடிஷ் விமானிகள் வெகு சிறப்பானவர்கள். ஜெர்மன் விமானங்களைக் காட்டிலும் பிரிடிஷ் விமானங்கள் மேலானவை. ஜெர்மன் விமானிகளைக்காட்டிலும் பிரிடிஷ் விமானிகளும் மேலான வர்கள். இப்பொழுது படையெடுத்தாலும், சற்றுப் பிறகு படையெடுத் தாலும் ஜெர்மனிக்கு அபஜயமென்பது நிச்சயம்''.

22—9—40.

இரண்டு நாட்களுக்குமுன் வியாதியால் வருந்தும் ஜெர்மன் குழந்தைகளை எல்லாம் பிரிடிஷ் விமானங்கள் வதைப்பதாக ஜெர்மனி ஒலிபரப்பிற்று. இன்றைய தினம் 'பிரிடிஷ் விமானம் ஒன்றுகூட ஜெர்மனிக்குள் வர முடியாதென்று ஜெர்மனியில் ஒவ்வொரு குழந்தைக்குங்கூடத் தெரியும்' என்று மாற்றிவிட்டது. சனிக்கிழமையன்றும், ஞாயிற்றுக்கிழமையன்றும் மொஸேல் நதியைக்கடந்துவந்து பிரிடிஷ் விமானங்கள் 8 வெடி குண்டுகளையும், 40 தீ வெடிகளையும், வயல்களிலும் உணவுப் பொருள்கள் வைத்திருக்கும் கிட்டங்கிகளிலும் போட்டதாக ஹிந்துஸ்தானியில் ஒலிபரப்பியது. இதில் குழந்தைகளைப்பற்றிய பிரஸ்தாபம் ஒன்றுமில்லை.

மாலுமிகள், இன்ஜின்—அடுப்பு—வேலைக்காரர்கள் (ஸ்டோகர்கள்), தந்தி அடிப்பவர்கள், கம்பியில்லா தந்தி (வயர்லெஸ்) அடிப்பவர்கள், ராயல் இந்திய கடற்படைக்கு சேர்க்கவரும் கவர்ன்மெண்டு கோஷ்டியார் சுற்றுப்பிரயாண அட்டவணை.

இடம்.	தேதி, கிழமை.	வரும் நேரம்.	புறப்படும் நேரம்.	குறிப்பு.
	நவம்பர்மீ—			
மங்களூர் ...	4 திங்கள்	மாலை	...	மங்களூரில் இரவில் தங்குவார்கள்.
,, ...	5 செவ்வாய்	...	...	மங்களூரில் ஆட்களைப் பொறுக்குவார்கள்.
,, ...	6 புதன்	...	09.35	ரயிலில் பிரயாணம்.
கண்ணனூர் ...	,,	12.35	...	கண்ணனூரில் ஆட்களைப் பொறுக்குவார்கள்.
,, ...	7 வியாழன்	...	12.55	கண்ணனூரில் ஆட்களைப் பொறுக்குவார்கள்; அன்றே புறப்படுவார்கள்.
கள்ளிக் கோட்டை.	,,	15.00	...	கள்ளிக்கோட்டையில் அன்றிரவு தங்குவார்கள்.
,, ...	8 வெள்ளி	...	15.00	ஆட்கள் பொறுக்கிவிட்டு, புறப்படுவார்கள்.
எர்ணாக்குளம்...	9 சனி	10.00	...	எர்ணாக்குளத்தில் ஆட்களைப் பொறுக்குவார்கள்.
,, ...	10 ஞாயிறு	...	...	எர்ணாக்குளத்தில் தங்குவார்கள்.
,, ...	11 திங்கள்	...	10.00	கொல்லத்துக்குப் புறப்படுவார்கள்.
கொல்லம் ...	,,	15.00	...	கொல்லத்தில் இரவு தங்குவார்கள்.
,, ...	12 செவ்வாய்	...	...	கொல்லத்தில் ஆட்களைப் பொறுக்குவாகள்.
,, ...	13 புதன்	...	10.00	ரயிலில் பிரயாணம்.
சென்னப் பட்டணம்.	14 வியாழன்	07.00	...	சென்னப்பட்டணத்தில் தங்குவார்கள்.
,, ...	15 வெள்ளி	...	...	சென்னப்பட்டணத்தில் ஆட்களைப் பொறுக்குவார்கள்.
,, ...	16 சனி	...	08.00	ரயிலில் பிரயாணம்.
டில்லி ...	18 திங்கள்	09.00	...	டில்லியில் தங்கியிருப்பார்கள்.
,, ...	19 செவ்வாய்	...	08.00	ஜஜருக்குப் புறப்படுவார்கள்.

புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் XIV.

1940—				மணி.
அக்டோபர்	12, சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
	13, ஞாயிற்றுக்கிழமை.	புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம்.	,,	5.00
		மிதிலைப்பட்டி ...	,,	5.30
		காரையூர் ...	,,	5.30
	14, திங்கட்கிழமை ...	காலேஜ் (A) ஆங்கிலம் ...	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை ...	,,	10.25
		கரம்பக்குடி ...	மாலை	5.30
		வேகுபட்டி ...	,,	5.30
	15, செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (B) தமிழ் ...	காலை	10.25
		விராலிமலை ...	மாலை	5.30
		நச்சாந்துபட்டி ...	,,	5.30
		பனையபட்டி ...	,,	5.30
		புதுக்கோட்டை டவுன் சாந்தார் கோவில் அம்மன் சன்னதி.	,,	6.30
	16, புதன்கிழமை ...	லேடீஸ் கிளப் (ராணி ஸ்கூலில்).	,,	5.00
		குருவிக்கொண்டான் பட்டி.	,,	5.30
	17, வியாழக்கிழமை ...	புதுப்பட்டி (பொன்னமராவதி).	,,	5.30
		ஆலங்குடி ...	,,	5.30
	18, வெள்ளிக்கிழமை...	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00

பிரஸங்கம் XV.

1940—				மணி.
அக்டோபர்	19, சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
	20, ஞாயிற்றுக்கிழமை.	திருக்கோகர்ணம் ...	,,	5.30
		ஆதனக்கோட்டை ...	,,	5.30
		பூவரசகுடி ...	,,	5.30
	21, திங்கட்கிழமை ...	காலேஜ் (A) ஆங்கிலம் ...	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை ...	,,	10.25
		அரிமளம் ...	மாலை	5.30
	22, செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (B) தமிழ் ...	காலை	10.25
		சேரி ...	மாலை	5 30
		குன்னாண்டார்கோவில் ...	,,	5.30
		குடுமியாமலை ...	,,	5.30
		ராமச்சந்திரபுரம் ...	,,	5.30
	23, புதன்கிழமை ...	அன்னவாசல் ...	,,	5.30
		விராச்சிலை ...	,,	5.30
	24, வியாழக்கிழமை ...	கோனாபட்டு ...	,,	5.30
		பெருங்களூர் ...	,,	5.30
	25, வெள்ளிக்கிழமை.	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00

Sri Brihadamba State Press, Pudukkottai. 4,400—12-10-40.